சுத்தத்திற்கும் சுவைக்கும்
புகழ்பெற்ற
சைவ ஹோட்டல்
தேவி விலாஸ்
சுத்தம், சுவை,
அன்பான உபசரிப்பு!
சைவ போசனகாரர்
மனதில் என்றும்
தேவி விலாஸ்
(வண்ணைச் சிவன்கோவில் சந்தி)
888 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

UNIVERSITY OF SRI LANKA ... RECEIVED 19.. -4-1 PERIODICALS DIVISION LIBRARY

ஈழநாடு
The EELANAADU
50 சதம்
22 பங்குனி 29 ஜ-அவ் 24 இதழ் 61
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 11-4-80

## ஈரான் தூதுவர்க்கு சிறப்பான வரவேற்பு

தெஹ்ரான், ஏப். 10

அமெரிக்க அதிபர் திரு. கார்ட்டரின் உத்தரவையடுத்து அமெரிக்காவிலிருந்து வெளியேறிய ஈரான் ராஜதந்திரிகள் இன்று தெஹ்ரான் வந்துசேர்ந்தபோது சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது.

ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் மணிக்கணக்கில் விமான நிலையத்தில் காத்திருந்து இவ்வதிகாரிகளை வரவேற்றனர். (கு)

★ நிதி அமைச்சரின் வெளிநாட்டுப் பயணத்தின் பலன்

# பல கோடி ரூபா பண உதவி!

## "அபிவிருத்தி இல்லையேல் அழிந்துவிடுவோம்" சபையில் நிதி அமைச்சர்

(கொழும்பு)

**இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பெருமளவில் உதவ உலக நாடுகள் பல முன்வந்துள்ளன, வெளிநாடுகளிலிருந்து உதவியைக் கோருமுகமாகச் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டி மெல், எதிர்பார்த்ததிலும் பார்க்கக் கூடுதல் உதவிகள் கிடைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.**

தமது பயணம் தொடர்பாக திரு. மெல் நேற்று பாராளுமன்றத்தில் அறிக்கையொன்றினைச் சமர்ப்பித்தார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

"இலங்கைக்கு கூடுதலாக உதவி வழங்கிவரும் நாடுகளில் தமது சொந்தச் செலவிற்கே கஷ்டங்கள் ஏற்பட்டுள்ளதால்; உதவி வழங்க வேண்டாம் என்று அந்த நாட்டு மக்கள் கோரிவருவதால் நாம் உதவி பெறுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. உருக்கமான வேண்டுகோளின் பின்னரே நமக்கு உதவ நாடுகள் முன்வருகின்றன.

"அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் பல, எண்ணெய் விலை அதிகரிப்பால் அபிவிருத்தித் திட்டங்களையே கைவிட்டுவிட்டன. ஆனால் நாமோ அபிவிருத்தியின்றேல் அழிந்து ஒழிவோம் என்ற நிலையில் செயல்பட்டுவருகிறோம்" என்று தெரிவித்துள்ளார்.

ஒப்பேக் நிதி ஸ்தாபனம் கிராமிய மின் திட்டங்களுக்கு 10 கோடி ரூபாவையும், பிரிட்டன் விக்டோரியாத் திட்டத்திற்கு மேலும் 21 கோடி ரூபாவையும், ஈராக் 8 கோடி ரூபாவையும் சவூதி அரேபியா 80 கோடி ரூபாவையும் தந்து தவவுள்ளதாகவும் நிதி அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

கொத்மலைத் திட்டத்திற்கு சுவீடன் 20 கோடி ரூபாவைத் தந்துதவ விருப்பம் தெரிவித்துள்ளதாகவும், அரசின் அனுமதி கிடைத்ததும் அவை நமக்குக்கிடைக்குமென்றும்நிதி அமைச்சர் தெரிவித்தார். (கு)

பெண்கள் பிரசவ வைத்தியசாலையில் சம்பவம்

## டாக்டராக நடித்த பொலிஸ் இன்ஸ்பெக்டர்!

[கொழும்பு]

கர்ப்பம் தரித்த பெண்களை டாக்டர் எனக் கூறிப் பரிசோதனை செய்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்!

கொழும்பு, டி சொய்ஸா ஞாபக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட கர்ப்பம் தரித்த தாய்மார்களை இரவு வேளைகளில் டாக்டர் எனக் கூறி பரிசோதனை செய்துவந்த நபர் ஒருவர் அண்மையில் பெண் நோயாளிகளுடன் இரவு வேளைகளில் தகாத முறையில் நடந்துகொண்டாராம்.

இதனால் சந்தேகமடைந்த வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், இந்நபரை தொந்தரவு செய்யவே, அவர் ஓட முயன்றபொழுது அவரைத் துரத்திப் பிடித்து மொறட்டுவ பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

இந்நபரை விசாரணை செய்தபொழுது இவர் கல்கிசை மாவட்டத்தைச் சேர்ந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் என்பதும் தெரியவந்துள்ளது. இவருடைய வாக்குமூலத்தைப் பதிவு செய்த மொறட்டுவ பொலிசார் பின்னர் இவரை விடுவித்தனர்.

பெண் வார்ட்டிலிருந்த நோயாளிகள், இவரே தங்களைப் பரிசோதனை செய்த 'டாக்டர்' என அடையாளம் காட்டினர். ஆஸ்பத்திரி சிற்றூழியர்கள் இச்சம்பவம் தொடர்பாக மகஜரொன்றை வைத்திய அதிகாரிக்கு சமர்ப்பித்ததுடன், இப்பொலிஸ் அதிகாரிக்கு எதிராக உடனடி நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுள்ளனர்.

இந்நபர் கைது செய்யப்பட்டபொழுது, மதுபோதையில் இருந்ததாக மொறட்டுவ பொலிசார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பாகப் பொலிசார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டுவருகின்றனர். [வெ-கு]

வெங்காய விதை
இறக்குமதி செய்யப்பட்ட பூசா ரெட்ரக வெங்காய விதைகள் இன்றுமுதல் கிடைக்கும்
உங்கள் தேவைக்கு!
பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்
107, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

ரியூட்டரி மாணவி கொலைவழக்கு:

## யாழ். மேல்நீதிமன்றத்தில் பிணை விண்ணப்பம் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி ரியூட்டரி மாணவி கமலம் கொலை தொடர்பான 2வது சந்தேக நபரான பொன்சியஸ் பெர்ணன்டோவை பிணையில்செல்ல அனுமதிக்குமாறு கோரி யாழ் மேல் நீதிமன்றத்தில் விண்ணப்பம் தாக்கல்செய்யப்பட்டது.

யாழ் மேல் நீதிமன்றத்தின் நீதிபதி ஜனாப் எம். ஜாமில் முன்னிலையில் இந்தப் பிணை விண்ணப்பம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சட்டத்தரணி ஆர். சிறீசிவாயா, இப்பிணை விண்ணப்பத்தைத் தாக்கல்செய்து வாதம் நிகழ்த்தினார்.

அரச தரப்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். தவராசா இப்பிணை விண்ணப்பத்திற்கு மறுமொழி அனைக்க அவகாசம் வழங்குமாறு கோரினார்.

நீதிபதி விசாரணையை மே 5ந் தேதிக்கு ஒத்திவைத்தார். (க)

## "இரவு ரயில் சேவையில் மாற்றம் செய்யவும்" யாழ். அரச அதிபர் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

புதிதாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் இரவு கடுகதி புகையிரதத்தை பிரயாணிகள் நலன் கருதி தபால் புகையிரதத்திற்கு பின்னர் சேவையில் ஈடுபடுத்துமாறு யாழ் மாவட்டச் செயலாளரும், அரச அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி கேட்டுள்ளார்.

இது தொடர்பாக போக்குவரத்து அமைச்சின் செயலாளருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் கேட்டிருப்பதாவது:-

"தற்போது கொழும்பிலும், காங்கேசனிலிருந்தும் புறப்படுகின்ற தபால் புகையிரத வண்

(8-ம் பக்கம் பார்க்க)

செல்வா நினைவாலய காணியை நிரப்ப

## யாழ். மாநகரசபை கூட்டணி உறுப்பினர்கள் உதவுவர்

[யாழ்ப்பாணம்]

தந்தை செல்வா நினைவாலயம் அமைந்துள்ளகாணியை மண்போட்டு நிரப்புவதற்கும் ஏனைய சகல உதவிகளையும் வழங்க யாழ். மாநகரசபை கூட்டணி உறுப்பினர்கள் முன்வந்துள்ளனர்.

செல்வா நினைவாலயத் திறப்புவிழா ஏற்பாடுகள் சம்பந்தமாக ஆராயும்பொருட்டு யாழ் மாநகரசபையின் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் யாழ் மாநகர முதல்வர் திரு. இராசாவிசுவநாதன் தலைமையில் கூடி ஆராய்ந்தனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:

இம்மாதம் 26-ம் திகதி நடைபெறும் செல்வா நினைவாலயத் திறப்புவிழாவை யாழ் நகர் முழுவதும் கோலாகலமாக கொண்டாடும்படி யாழ். மேயர் மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கவேண்டும்.

அன்றைய தினம் இன்னிசை ... துரையப்பா விளையாட்டரங்கில் நிகழ்த்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுதல், நகர் முழுவதையும் அலங்கரித்தல், விழாவிற்கு வரும் மக்களுக்கு குழாய் மூலம் குடிநீர் வழங்குவதுடன் இரவுபகலாகதேனீர்க் கடைகளையும் உணவு விடுதிகளையும் திறந்துவைக்கும்படி கடை உரிமையாளர்களைக் கோருதல்

"விசேஷ பஸ்சேவை சம்பந்தமாக வட பிராந்திய போக்குவரத்துச் சபை தலைவருடன் தொடர்பு கொண்டு ஒழுங்குகளை மேற்கொள்ளுதல் பருத்தித்துறை

(8-ம் பக்கம் பார்க்க)

வெளிநாடு செல்ல விரும்புவோர்க்கு
அரிய சந்தர்ப்பம்

மேற்கு ஜெர்மனி லண்டன்
ஸ்பெயின் இத்தாலி
டென்மார்க்

பயணிகளுக்கு விசா, (6 மாதம்) ரிக்கட், அந்நியச் செலவாணி, ஆசனப்பதிவு ஆகியவற்றை தாமதமின்றி செய்துதரக் காத்திருக்கின்றோம்.

விபரங்களுக்கு:
GITHA'S TRAVELS & TOUR OPERATORS
JAFFNA
615 B, Hospital Road,
Jaffna.
COLOMBO
15, Palmyrah Avenue,
Colombo-3
T.Phone; 85919

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

காட்சியறை நிலையிலுள்ள 54ஸ்ரீ தொடர் இலக்கம் கொண்ட டோயாட்டோ ஹைஏஸ் (TOYOTO HIACE) வேன் விற்பனைக்குண்டு. 115, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 5415

நன்கு பராமரிக்கப்பட்ட முதல் தரமான, பருவமுள்ள கொடிமுந்திரிகை கன்றுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. நா. ஜெயசீலன், இருபாலை றோட், கோண்டாவில். 5454

13-4-80 (ஞாயிறு) யானிப்பாய் மருதடி விநாயகர் தேர் திருவிழா அன்று மில்க்வைற் தயாரிப்புக்கள் யாவும் சகாய விற்பனையுடன் அன்பளிப்பும் வழங்கப்படும். மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் மில்க்வைற் விளம்பர விற்பனை வாகனத்தில் கொடுத்து பெறுமதி வாய்ந்த பரிசில்களைப் பெற்றுக் கொள்ளலாம். மில்க்வைற்- யாழ்ப்பாணம். 5377

## தேவை

பனங்கங்கு மட்டைகள் பத்து அங்குலத்திற்கு மேற்பட்ட நீளமுடைய பச்சை பனங்கங்குமட்டைகள் பெருந்தொகையாக- சுருவிலில் உள்ள பனந்தும்புத் தொழிற்சாலைக்கு- காரைநகர், மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை கிழக்கு, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களிலிருந்து வழங்கக் கூடியவர்களும் பனம்தும்பு அடிப்பதில் அனுபவம் உள்ளவர்களும் உடன் நேரில் தொடர்புகொள்ளவும். விக்ரர் அன் சன்ஸ், இல: 100, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7346. (5458)

ஓவியம், புகைப்படம், புளொக், றபர்சீல் வேலைகள் செய்யக்கூடியவர்களும், பழக விரும்புவர்களும் [illegible] வும். ஆண், பெண் இருபாலாரும் ஏற்றுக் கொள்ளப்படுவர். கலைஞானி, 11/7 மொாம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 5456

## வாடகைக்கு

கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதியில் மின்சார வசதியும், குழாய் தண்ணீர் வசதியும் உள்ள இரண்டு அறைகள் சாலைவசதியுடனும், சமையல் வசதியுடனும் கிடைக்கும். கோண்டாவில் போஸ்ட் ஆபீசுக்குக்கிட்ட இருக்கும் ப. இ. சு. சந்திரசேகரம்பிள்ளையுடன் தொடர்பு கொள்ளவும். 5452

## FOR SALE

Akai 9500 EG VHF/UHF Colour Video Recorder with over 560 hours of English / Hindi Films plus 26 inch Phillip Auto Colour T V. All new from U K. Also many electrical items Concrete Mixer, Electrical Tools, Fitting Contact Nathan, Vadaliadaippu, Pandateruppu 5422

1974 Model Leyland Boxer 11 Tons Lorry Chassis 6 cylinder Engines Excellent condition Offer over 1·5 Just Registered. Imported from U K Contact Nathan, Vadaliadaippu, Pandateruppu 5421

# பின்னுறுக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

காலஞ்சென்ற ஜெயக்குமார் ஸ்கொற் என்பவரது மரணசாதனமற்ற மரணச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன )
நியாயாதிக்கம் )
இல ரி/3514

எட்வேர்ட் துரைசிங்கம் ஸ்கொற் கோப்பாய் தெற்கு.
மனுதாரர்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே பெயர் கொண்ட குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980-ம் ஆண்டு வைகாசி மாதம் 2-ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதி மன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றனர்.

1980-ம் ஆண்டு தை மாதம் 25-ந் திகதி.

(ஒப்பம்)
**பொ. பாக்கியநாதன்**
பதிவாளர்,
யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்.

வரைதல்:
ஒப்பம்)
**செ. மகேசன்**
மனுதாரின் சட்டத்தரணி.
5443

# பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

காலஞ்சென்ற லொறன்ஸ எட்வேர்ட், 9/2 மூலை ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்பவரது மரண சாதனத்தின் மரணச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்

எட்வேர்ட் ரேய் ஒஸ்ரின் பொன்ராஜ், 9/2, மூளாய் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
மனுதார்.

மரணசாதன )
நியாயாதிக்கம் )
இல: ரி/3513

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக / மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980-ம் ஆண்டுவைகாசிமாதம் 2-ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1980-ம் ஆண்டு தை மாதம் 25-ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி.

(ஒப்பம்)
**பொ. பாக்கியநாதன்**
பதிவாளர்.

வரைதல்;
(ஒப்பம்)
**செ. மகேசன்**
மனுதாரின் சட்டத்தரணி.
5443

# மண்டைதீவு குற்றச்சம்பவங்களை ஒழிக்க

# பாதுகாப்புச்சபை, சமாதானக்குழு அமைக்க கருத்தரங்கில் தீர்மானம்

(வண்ணார்பண்ணை,

மண்டைதீவுக் கிராமத்தில் பொதுமக்களை உள்ளடக்கிய பாதுகாப்புச்சபை ஒன்றும், சமாதானக் குழுவொன்றும் நிறுவுவதென மண்டைதீவில் நடைபெற்ற கருத்தரங்கில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் வடபிரதேச உதவிப் பொலிஸ் அதிபரும் கலந்துகொண்ட இக் கருத்தரங்கில் பொலிஸ் அதிகாரிகளும் மண்டைதீவுக் கிராமத்தைச் சேர்ந்த பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். மண்டைதீவு கிராமசபை மண்டபத்தில் நடந்த இக் கருத்தரங்கிற்கு மண்டைதீவு மறுமலர்ச்சி இயக்கத் தலைவர் திரு. இ. நா. இராசலிங்கம் தலைமைவகித்தார்.

மண்டைதீவில் குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் இக் கிராமத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராயுமுகமாகவும் மண்டைதீவு மறுமலர்ச்சி இயக்கத்தினால் இக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மண்டைதீவில் பொலிஸ் நிலையம் ஒன்று அமைக்க எடுக்கப்படும் நடவடிக்கையைக் கைவிடுமாறு இக் கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸ் அதிகாரிகள் அத் திட்டத்தை கைவிடுவதாக வாக்குறுதி தெரிவித்துள்ளார்.

வடபிராந்திய உதவிப் பொலிஸ் அதிபர் திரு. ஜெயதிச ஹேரத், யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் மண்டைதீவு கிராமசபையின் [illegible] யாளருமான திரு. என். எஸ். தாமபாலன், யாழ்ப்பாணப் தலைமைக்காரியாலய பொலிஸ் பொறுப்பதிகாரி சந்திரா பெரேரா, பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. எஸ். திருச்சிற்றம்பலம், மண்டைதீவு கிராமசேவையாளர் திரு. ந ஸ்ரீபாலன் ஆகியோர் அரசாங்க சார்பில கலந்துகொண்டனர் மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ், எஸ் தர்மபாலன் பேசுகையில் கூறியதாவது:

"எமது மக்கள் பரத்தை வெட்டி - மண்ணை வெட்டி வியர்வை சிந்தி நாட்டை வளமாக்கி தமது வாழ்வையும் உயர்த்திக்கொள்கின்றனர். இங்கு சிலர் மனிதர்களை வெட்டி பாவத்தைத் தேடுவதுடன் தமது பணத்தையும் செலவுசெய்து தம்மைத் தாமே அழித்துக்கொள்வது மிகவும் கவலைப்படத்தக்க விஷயமாகிறது. பிரச்னைகள் மிகுந்ததும் பின்தங்கிய பகுதியுமான மண்டைதீவுக் கிராமத்திற்கு விசேட ஆணையாளராகக் கடமையாற்றுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இக் கிராமத்தில் எழுந்துள்ள குற்றச்செயல்களைத் தடுத்து நிறுத்த இங்கு பொலிஸ்நிலையம் ஒன்றை நிறுவ நான் ஏற்பாடுசெய்திருந்தேன். ஆனல் அதற்கு இக் கருத்தரங்கில் மறுப்புத தெரிவிக்கப்பட்டதால் பொலிஸ் அதிபருடைய ஆலோசனைப்படி அதற்குப் பதில் வேறு சபைகள் நிறுவ நடவடிக்கை எடுக்கலாம்" என்றார்.

உதவிப் பொலிஸ் அதிபர் திரு. ஹேரத் பேசுகையில் கூறியதாவது:

குற்றச்செயல்களைக் கண்டு பிடித்து தண்டிப்பதும், குற்றங்கள் நடக்காது பாதுகாப்பதும் எமது முக்கிய கடமை சட்டத்தையும் ஒழுங்கையும் கடைப்பிடித்து நடக்கும் பொதுமக்களை நாம் குற்றவாளிகளாக கருதமுடியாது. குற்றச்செயல்களைக் கண்டு பிடிப்பதற்கும் குற்றவியல்களை தடுப்பதற்கும் பொதுமக்கள் பொலிசாருக்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும். இக் கிராமத்தில் எழுந்துள்ள பிரச்னைகளைத் தீர்ப்பதற்கும் குற்றங்களைத் தடுப்பதற்கும் பொதுமக்களாகிய நீங்கள் இப்படியான கருத்தரங்கை ஏற்படுத்தி பொலிசாருக்கு ஒத்துழைப்பு நல்குவதற்கு முன்வந்ததையும் பொதுமக்கள் மத்தியில் இப்படி ஆராய்ந்து தீர்வுகாண முன் முன்வந்ததையும் நான் வந்ததையும் நான் பாராட்டுகின்றேன். புதுவருடத்தை முன்னிட்டு மதுபானம் பாவித்தல், மதுபோதையில் வீதிகளில் நடமாடுதல் ஆகியவை தடைசெய்யப்படுவதுடன் பொதுமக்கள் வீதிகளில் நடமாடுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன" என்று கூறினர்.

மண்டைதீவு மறுமலர்ச்சி இயக்கச் செயலாளர் " திரு. க. ராசசிங்கம் பேசுகையில், உயர்ச்சியிலும் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் அக்கறை கொண்ட மக்கள் எமக்கு தமது பூரண ஆதரவை நல்க வேண்டும். தமது எதிர்கால வாழ்க்கையை உயர்த்திக் கொள்ளவேண்டிய இளைஞர்களைக் கூட சிலர் தவறான பாதைக்கு இழுத்துச்செல்லும் அபாயகரமான நிலை ஏற்படுகிறது. இதை தடுப்பதற்கு குறிப்பாக மாணவர்களதும் இளைஞர்களதும் நல்ல நோக்கங்களுக்கு நாம் துணைபுரிவதற்கு எம்முடன் ஒத்துழைக்க வேண்டும். குற்றச்செயல்களை தூண்டுபவர்களையும் புரிபவர்களையும் கண்டுபிடித்து, தண்டித்து இப்படியான விஷச் சிந்தனைகள் வளர்ந்துவரும் சமுதாயத்திடம் ஏற்படாமல் இருப்பதற்கும் இக்கிராமத்தில் அமைதியும் ஒழுங்கும் நிலைநாட்டுவதற்கு பொலிசார் தம்மால் இயன்றளவு உதவ வேண்டும். இக் கிராமத்தில் பொலிஸ்நிலையம் அமைப்பதன் மூலம் பிரச்னைகளைத் தீர்க்க முடியாது. எனவே குற்றங்களைத் தடுப்பதற்கும் கண்டு பிடிப்பதற்கும் பாதுகாப்புச் சபைகளையும் சமாதான சபைகளையும் நிறுவவேண்டும்" என்றார்.

இக்கருத்தரங்கில் மண்டைதீவு கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் திரு. செ. அ. ஸ்ரீபத்மராசா, இச் சங்கத்தலைவர் திரு. அ. ஜெயகுணதிலகம், மறுமலர்ச்சி இயக்கத்தலைவர் திரு. நா. இராசலிங்கம் உட்பட பலர் கருத்துரைகள் வழங்கினர்.

# வெற்றுச்சாக்கும், சீமெந்து வெற்றுப் பைக்கற்றுகளும் விற்பனை

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 5000 வரையிலான வெற்றுச் சாக்குகளும், 600க்கு மேற்பட்ட சீமெந்து வெற்றுப் பைக்கற்றுகளும் விற்பனைக்குள்ளன. கொள்வனவு செய்ய விரும்புவோர் ரூபா 5/- கேள்விப் பத்திரப் பணமாகவும் ரூபா 250/- கேள்விப்பணமாகவும் கட்டி கேள்வி விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம். மேலும் விபரங்கள் அறிய விரும்பின் சங்க அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம். தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் ரூபா 500/- பிணைப்பணமாகக் கட்டுவதுடன் 18-4-80க்குமுன் முழுப்பணத்தையும் செலுத்தி மேற்படி பொருட்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

முடிவு திகதி: 18-4-80 பகல் 12-00 மணி.

பதில்
**பொது முகாமையாளர்,**
5458

# சென்னையில் அந்தனிஜீவா நாடகங்கள்

[சென்னை]

"இலங்கையில் தமிழ் நாடகம் மிகவும் வளர்ச்சி அடைந்துள்ளது கலை இலக்கியத் துறைகளில் புதிய தலைமுறையினர் தரமான படைப்புகளை படைக்கின்றனர். இலங்கைக் கலைஞர்களின் கலை, படைப்புகளை தமிழக மக்கள் அறியும் வண்ணம் சென்னையில் ஐந்து நாடகங்களை மேடையேற்றவிருக்கிறேன்."

இவ்வாறு எழுத்தாளரும், பத்திரிகையாளரும், இலங்கையில் முன்னணி நாடகக் கலைஞருமான அந்தனிஜீவா சென்னையில் பத்திரிகையாளரிடம் உரையாடும் பொழுது கூறினர்.

சென்னையில் கலை இலக்கிய நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க அந்தனிஜீவா தான் எழுதி நெறிப்படுத்திய ஐந்து நாடகங்களை மேடையேற்றுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யவே சென்னை வந்திருப்பதாகக் குறிப்பிட்டார்.

நாடகக் கலைஞரான அந்தனி ஜீவா 1978ம் ஆண்டு தமிழ் நாட்டில் திருப்பூரில் நடைபெற்ற கலை இலக்கிய பெருமன்ற மாநாட்டில் கலந்து கொண்டு பேராசிரியர் நா. வானமாமலை தலைமையில் "ஈழத்தில் தமிழ் நாடகம்" என்ற தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்தினர். இவர் எழுதி "பறக்காத கழுகுகள்" "தாய்" "வசந்த காலங்கள்" ஆகிய ஐந்து நாடகங்களை ஐந்து நாட்கள் சென்னையில் மேடையேற்ற சென்னை நாடக சபாக்களுடன் பேச்சுவார்த்தைநடத்தவிருக்கிறர். சென்னையில் அந்தனி ஜீவா, தமது நாடகங்களை அரங்கேற்றுவதன் மூலம், தமிழக நாடக ரசிகர்களுக்கும், பரிசோதனை முயற்சிகளில் ஈடுபடும் கலைஞர்களுக்கும் இலங்கை நாடகங்கள் ஒரு வழிகாட்டியாக அமையும் என்று தெரிவித்தார்.

# நன்றி நவிலல்

வடலியடைப்பு வைத்திய நிபுணர்

**டாக்டர் சி. தம்பித்துரை அவர்களை**

யான் பெரிதும் பாராட்டுகின்றேன். பல ஆண்டுகளாக குழந்தைகளின்றி விரக்தியடைந்த நாம் டாக்டரின் அரிய சாதனையை கேள்வியுற்ற அன்னரின் உதவியை நாடினேம். சில மாதங்கள் அவரின் மருந்துகளைச் சாப்பிட்டதும் ஓர் ஆண்டு முடிவில் எமது ஆசை பூர்த்தியானது. 9-4-80 காலை ஓர் பெண்மகவு

**ஜெயந்திக்குத்**

தந்தையானேன். என்போன்றவர்களுக்கு இத்தகவலைத் தெரிவிக்குமுகமாகவே எனதுபாராட்டுக்களை பத்திரிகை மூலம் தெரிவிக்கின்றேன்.

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.

இப்படிக்கு
**செ. தவச்செல்வம்.**
5457

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

தமிழ்- சிங்கள புத்தாண்டு தினத்தை யொட்டி 13-4-80 ஞாயிற்றுக்கிழமை 'ஈழநாடு' அலுவலகத்திற்கு விடுமுறையாதலால் 14-4-80 திங்கட்கிழமை மட்டும் 'ஈழநாடு' வெளிவரமாட்டாது.

## மணிவாக்கு

ஒரேயோர் உண்மை உளது. ஒரே மெய்ப்பொருள் உளது அந்த உண்மை நீயே. இந்த உண்மையை விடாது பற்றுக உண்மையுள்ளவனுயிருக்குக. இவ்வுண்மையை அனுபவத்தில் உளதாக்கி விடுதலையடைக.

—சுவாமிசிவானந்தர்

## மக்கள் கருத்து

### தடை செய்யாதீர்

பல ஆயிரக்கணக்கான இலங்கை வாழ் நாடகஇரசிகர்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்திய கோண்டாவில் வடக்கு ஸ்ரீவாகீஸ்வரி நாடக மன்றத்தாரின் ''அலாவுதீன்'' என்னும் வரலாற்று நாடகத்தை அண்மையில் வீடியோ திரைப்படமாக தொலைக்காட்சியில் பார்த்து இரசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

அந்நாடகத்தின் கலைஞர்களின் ஆக்கத்தை வீடியோ மூலம் திரைப்படமாக்கியுள்ள விதம் இரசிகப்பெருமக்களை வியப்பில் ஆழ்த்துவதாக உள்ளது. திரைப்பட இயக்குநரின் திறமையைப் பாராட்டுவதா அல்லது ஒளிப்பதிவாளரைப் பாராட்டுவதா என்பதுதெரியவில்லை. சினிமாப்படத்தை ஒருபடி மிஞ்சிவிட்டார்கள். உள்ளூர்அழகிய இயற்கைக்காட்சிகளையும் தென்னிந்திய திரைப்படப்பாடல்களையும் மிகவும் தத்ரூபமாகக் கையாண்டு கலையுலகில் கைதேர்ந்த சிறந்த நடிகர்களையும்நடிக்க வைத்துள்ளனர்.

பொதுவாக திரை அரங்குகளில் காண்பிக்கப்படும் 35 மி. மீற்றர் சினிமாப்படம் தயாரிப்பதற்குத் தேவைப்படும் பணத்தில் நூறில் மூன்று பங்கே வீடியோ திரைப்படம் தயாரிப்பதற்குச் செலவாகின்றது.

நடிகர்கள் மேடை நாடகங்களில் ஒரே நாடகத்திற்காகப் பற்பல மேடைகளில் தோன்றி நடிக்கவேண்டியுள்ளது. இதனால் புதிய தயாரிப்புகளில் தங்களது திறமையைக்காட்டமுடியாமல் போய்விடுகிறது.

வீடியோ திரைப்படத் தயாரிப்பு நடிகர்களையும்வேறு கலைஞர்களையும் மேலும் சில புதிய படைப்புக்களைத் தயாரிக்க ஊக்கப்படுத்துவதோடு அல்லாமல் இரசிகர்களுக்குப் பல ரகமான படைப்புக்களை கண்டுகளிக்க உதவுகின்றது. ஆகவே இப்படைப்புக்களை தென்னிந்திய வீடியோதிரைக்காட்சிகள் நடைபெறத் தடைவிதித்திருப்பது போலல்லாமல் எமது கலைஞர்களும் தொழில்நுட்பவியலாளரின் கடின உழைப்புக்கு மத்தியில் தயாரிக்கும் வீடியோ கலைப்படைப்புக்கள காண்பிக்கப்படுவதைத் தடைசெய்யாமல் திரைப்படக் கூட்டுத்தாபனமும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் யாழ். மாநகரமுதல்வரும் எமது கலைஞர்களின் படைப்புக்களை இரசிகர்கள் பார்ப்பதற்கும் அவர்கள் மேலும் வளர்வதற்கும் ஆவன செய்யும்படி வேண்டுகிறோம்.

குணம் ஸ்ரீகாந்தன்,
நாகலிங்கம் குணசிங்கம்,
இராசதுரை பரமலிங்கம்.
கோண்டாவில் வடக்கு.

பொதுமக்கள் — பொலிஸ்

# வேற்றுமை உணர்வுகள்

## நட்புறவுக் கழகங்களினால் நீங்கியது

### யாழ். பொலிஸ் அதிபர் பெருமிதம்

(நெல்லியடி)

''பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையே நிலவி வந்த வேற்றுமை உணர்வு பொலிஸ் பொதுமக்கள் நட்புறவுக்கழகங்களின் செயற்பாடுகளினால் நீக்கப்பட்டுள்ளது பொலிசாருக்குப் பொதுமக்கள் எதிரிகள் என்ற நிலையும் பொதுமக்களுக்குப் பொலிசார் எதிரிகள் என்ற நிலையும் வடபகுதியில் நான் பதவி யேற்ற காலத்தில் காணப்பட்டது ஆனால் இந்த நிலை நட்புறவுக் குழுக்கள் மூலம் இல்லாதொழிக்கப்பட்டு விட்டது.

மேற்கண்டவாறு வடபிராந்தியப் பொலிஸ் அதிபர் திரு கிங்ஸ்லி விக்ரமசூரியா சிங்கள தமிழ் புதுவருடத்தை முன்னிட்டு பருத்தித்துறைப் பொலிஸ் பொதுமக்கள் நட்புறவுக் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் தெரிவித்தார்.

பருத்தித்துறைப் பொலிஸ் அதிபர் திரு. சந்திர குணரத்ன தலைமையில் பொலிஸ் அத்தியட்சகர் மேலும் குறிப்பிட்டதாவது.

''பொலிஸாருக்கும் பொதுமக்களுக்குமிடையே பரஸ்பர ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டியது அவசியமாக இருந்தது. அதனால் நட்புறவுக் கழகங்களை ஒவ்வொரு பொலிஸ் பிரிவிலும் ஆரம்பித்து வைத்தேன். இவ்வாறான கழகங்களை அமைத்து வந்த காலத்தில் வல்வெட்டித்துறையில் சில மனவேதனைக்குரிய சம்பவங்கள் நடைபெற்றன. எனினும் அங்கு சிறப்பான வரவேற்புக் கிடைத்தது. இக்கழகங்களை அமைத்த செய்திகள் பத்திரிகைகள் மூலம் வெளிவந்த போது பொதுமக்கள் தமது பாராட்டுக்களை எனக்கு அனுப்பி வைத்தார்கள் அது எனக்கு உற்சாகமூட்டியது.

''இக்கழகங்கள் மாதாந்தம் கூடி ஆராயப்பட்ட பிரச்னைகள் எனக்கும் ஏ. எஸ். பிக்கும் அனுப்பி வைக்கப்படும். நாங்கள் இப்பிரச்னைகளில் தலையிட வேண்டியிருந்தால் உடனடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுக்கத் தயங்சமாட்டோம்.

''பொலிசார் சட்டத்திற்குப் புறம்பான வகையில் எவரையும் தண்டிக்கமாட்டார்கள். நீதித்துறையிடம் அவர்களை ஒப்படைத்து உரிய தண்டனையை பெற்றுக் கொடுப்பதே பொலிசாரின் கடமையாகும்.

மற்றும் இளைப்பாறிய சுகாதாரப்பரிசோதகர் திரு. கே. வேலுப்பிள்ளையும் உரை வழங்கினார். திருமதி விக்ரமசூரியா வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார்.

(அ)

# எதிர்க்கட்சித் தலைவருக்கு

## யாழ். தொலைக்கல்விநிறுவன மாணவ மன்றம் மகஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ். தொலைக்கல்வி நிறுவன, மாணவ மன்றத்தினரால் கடந்த பெப்ரவரிமாதம் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட மகஜர் சம்பந்தமாக, எதிர்க்கட்சித் தலைவர் உயர்கல்வி அமைச்சரிடம் கேள்வி எழுப்புவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்திலிருந்து மேற்படி மாணவர்மன்றத் தலைவர் திரு எ. அந்தோனிப்பிள்ளைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர் மன்றத்தால்சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் ஐந்து கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அக் கோரிக்கைகள் பின்வருமாறு:-

''1979-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 344 சிங்கள மாணவர்களுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டன. ஆனால் தமிழ் மாணவர் எவருக்குமே இது வழங்கப்படவில்லை. 450 பேருக்கு நியமனம் வழங்க மந்திரிசபை தீர்மானித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

''எமது தொலைக்கல்வி நிறுவனத்தில் 29 சிங்கள அலுவலர் இருந்தும் ஒரேயொரு தமிழ் அலுவலர் மட்டுமே கடமையாற்றுவதால், மேலும் தமிழ் அலுவலர் நியமிக்கப்படல் வேண்டும்.

''தமிழ்மாணவர்க்கு அனுப்பப்படும் பாடங்கள் நேரகாலத்திற்கு மாணவர்க்கு கிடைத்தல் வேண்டும், அதுடன் பரீட்சைக்கு ஒருமாதத்திற்கு முன்னர் அந்நெறியின் பாடங்கள் பூர்த்தியாக்கப்படல் வேண்டும்.

''பரீட்சைக்கு மூன்று வாரங்களுக்கு முன்னர் நேரசூசி அறிவிக்கப்படல் வேண்டும். பரீட்சையின் பெறுபேறுகள் விரைவில் அனுப்பப்படல் வேண்டும்'' என்பன போன்ற விடயங்கள் அம்மகஜரில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(கொ)

# தமிழ்த் தந்தியை ஏற்க மறுப்பு!

(ண்டனரிப்பு)

ஆனைக்கோட்டை உபதபால் நிலையத்திலிருந்து நுகேகொட தபால் நிலையத்திற்கு தமிழ்மொழியில் அனுப்பப்பட்டதந்தி ஒன்று அங்கு ஏற்கப்படாது திரும்பவும் ஆனைக்கோட்டைஉப தபால் நிலயத்திற்கு வந்து சேர்ந்துள்ளது!

ஆனைக்கோட்டைப் பகுதியிலுள்ள ஒருவர் நுகேகொடையில் நடைபெற்ற நண்பர் ஒருவரின் திருமணத்திற்கு தமிழ்மொழியில் வாழ்த்துத் தந்தியொன்றை ஆனைக்கோட்டை உபதபால் நிலையத்தின் மூலம் அனுப்பி வைத்தார். தமிழ்மொழியிலுள்ள அந்தத் தந்தியைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லையென்று நுகேகொடை தபால்நிலையத்தினர் அத்தந்தியைத் திருப்பி அனுப்பி வைத்துள்ளனராம்!

நாடெங்கிலும் தமிழ் மொழியில் தொடர்பு கொள்ளமுடியுமென்று அரசாங்கம் அறிவித்திருக்கையில் இப்படித் தமிழ்த்தந்திகள் புறக்கணிக்கப்படுவது குறித்து சம்பந்தப்பட்ட தந்தியை அனுப்பியவர் கவலை தெரிவித்தார்.

## ஆலயக் கூட்டம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பெருங்காடு மூத்த நயினார் புலம் ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய வருடாந்த பகாசபைக்கூட்டம் இம்மாதம் 14-ம் திகதி ஆலய மண்டபத்தில் சபைத்தலைவர் திரு. மா. குமாரசாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தேர்வும் இடம் பெறும்.

(கு)

## "ஆசிரியர் பற்றுக்குறை விரைவில் நீங்கும்"

(யாழ்ப்பாணம்)

கைதடி குருசாமி கனிஷ்ட வித்தியாலயத்தில் நிலவிவரும் ஆசிரியர் பற்றுக்குறை விரைவில் தீர்த்துவைக்கப்படும்.

இவ்வாறு சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சி. இராஜநாயகம் தெரிவித்தார்.

வித்தியாலய அபிவிருத்திச் சங்க தலைவரும், அதிபருமான திரு.ச. கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற மாணவர்களின் கலைவிழாவில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அபிவிருத்திச் சங்க உபதலைவர் திரு. கு. சின்னத்துரை, செயலாளர் திரு. சி. கனகரத்தினம் ஆகியோர் மங்களவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

திரு. இராஜரத்தினம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

கடந்த ஏழு ஆண்டுகளில் இவ் வித்தியாலயம் துரிதகெதியில் முன்னேறியுள்ளது பாராட்டுக்குரியது. அண்மையில் தென்மராட்சிப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற பொருட்காட்சியில் இப்பாடசாலை மாணவர்களினால் உருவாக்கப்பட்ட விவசாய, மனையியல், சித்திரப் பொருட்கள்

(7-ம் பக்கம் பார்க்க)

## நாடும் நடப்பும்

நேற்றுக்காலையில் ஒரு நண்பர் கவலையோடு முகத்தைத் தொங்கப்போட்டுக் கொண்டு வந்தார்

"என்னய்யா புதுவருஷம் வரப்போகுது! இப்போதே அழுதுவடிக்கிறீரே' என்று கேட்டேன்

அழாமல் என்ன செய்வது. முழுசா ஒரு ஐம்பதுரூபாய்த்தாள். காலையில்தான் அதை மணிப்பேர்சிலிருந்து வெளியே மேசையில் எடுத்துவைத்துவிட்டு அதை வருஷச் செலவுக்கு மனைவியிடம் கொடுப்பதற்காக அவளைக் கூப்பிட்டேன். அவள் வருவதற்குள் தலைவாருவதற்காக பாழாய்ப்போன சீப்பைத்தேடவேண்டி ஏற்பட்டது. எத்தனை சீப்புக்கள்தான் இருக்கட்டுமே. நமக்கென்று வந்துபிறந்திருக்கிறதுகள் அவற்றை எங்கேயாவது சுழற்றி விட்டிடுங்கள்''

கதையை நீட்டிக்கொண்டே போன நண்பரை இடைமறித்து ஐம்பதுரூபாய் நோட்டைப்பற்றி ஆரம்பித்து சீப்புக்குவந்துவிட்டீர் இனி எங்கே சஞ்சரிக்கப்போறீர்? என்றேன்.

கொஞ்சம் பொறுமையுடன் என்வயிற்றெரிச்சலைக் கேளும் என்று சொன்ன நண்பர் தொடர்ந்தார்.

சீப்பைத்தேடி எடுத்து தலையிலுள்ள நாலுமயிரையும் ஒருவாறு சரிசெய்துகொள்ளவும் என்மனையாள் ''கூப்பிட்டீங்களா'' என்று 'அவசரமாக' வந்து நிற்கவும் நோட்டைத் தேடினேன், வைத்த இடத்தில் காணவில்லை அந்த இடம்முழுவதுமென்ன, வீடு, முற்றம் எல்லா இடத்திலும் தேடிக்களைத்துப்போனேன் ஒரே அமர்க்களம்தான்!

''அப்பா இந்த 'வாட்டர் பிக்சர் எப்பிடித்தான் தேய்ச்சாலும் ஓட்டுதில்லை' என்றபடி என்கடைக்குட்டி அந்தநோட்டுடன் வந்தாள்.

அவளுடைய எச்சில், தண்ணீர் போதாக்குறைக்கு அவளின் உதவிக்குச் சென்ற அவள் அண்ணனின் கைவரிசை எல்லாம் சேர்த்து ஐம்பது ரூபாய் நோட்டு உருக்குலைந்து உதவாமல் போய்விட்டது''

'புதிய ஐம்பதுரூபாய் நோட்டில் பல வண்ணங்களில் பறவைகள் விலங்குகள் அச்சிடப்பட்டுள்ளதன் விளைவு தான் இது!

நோட்டுக்கே மதிப்பில்லாமல் போய்விட்டது என்றார் நண்பர். நாணயமிருந்தாலல்லவா மதிப்பிருக்கும்!

0 0 0

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் 'பனடோல்' என்ற காய்ச்சல் வில்லைகளுக்கும் தட்டுப்பாடாம். அதையும் வெளியே வாங்கிக்கொள்ளுமாறு அங்கு எழுதிக்கொடுக்கப்பட்டதாக ஒரு நோயாளி குறைப்பட்டுக்கொண்டார்.

0 0 0

பாடசாலைகளில் படிக்கும் மாணவர்கள் குறிப்பாக உயர் வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள் வெறும்பாடநூல்களைப் படிப்பதுடன் நின்றுவிடாமல் நூல்நிலையங்களைப் பயன்படுத்தி பாட நூல்களில்வரும் விஷயங்கள்பற்றி விவரமான தகவல்களையும் விளக்கங்களையும் தெரிந்துகொள்வதுடன் பொது அறிவையும் விருத்திசெய்துகொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டில் இதற்காக அடுத்த ஆண்டுமுதல் உயர்கல்வி நிலையங்களில் நூலகப் படிப்புக்காக வாரத்தில் ஒரு வாரம் ஒதுக்கப்படவிருக்கிறது

இங்கும் நமது பாடசாலைகளிலும் நூலகப்படிப்புக்கென நேரம் ஒதுக்கப்பட வேண்டும். பத்திரிகை படிக்கும் பழக்கத்தையும் [ஒ...] அ[...]ஊக்கப்படுத்த வழி செய்ய வேண்டியது அவசியம்

- ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்பொல்லை மாதிரிக் கிராமம்

# 2-வது கட்ட வேலைகள்: சுவீகரிப்பு குறித்து மக்கள் கவலை

(உடுப்பிட்டி)

கன்பொல்லை மாதிரிக் கிராமத்தின் இரண்டாவது கட்டத் திட்ட வேலைகளுக்காக, இக்கிராமப் பொதுமக்கள் பலரின் காணிகள் சுவீகரிக்கப் படவுள்ளதால், பொதுமக்கள் அச்சம் ஏற்பட்டுள்ளதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக கரவெட்டி பேற்று, கரவெட்டி மத்தி கிராம அபிவிருத்திச் சங்கங்கள் பிரதமருக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும், யாழ். மாவட்ட அமைச்சருக்கும் தந்தி மூலம் தமது ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளன.

பிரஸ்தாப தந்தியில் இம் மாதிரிக்கிராம இரண்டாவது கட்ட வேலைகளுக்காகக் கட்டாயமாகக் காணிகளைச் சுவீகரிக்கப்படுவது இப்பகுதி மக்கள் மத்தியில் அமைதியின்மையை ஏற்படுத்தியுள்ளதென்றும், நியாயமான முறையில் இப்பிரச்சனையைத் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

## சிறுகைத்தொழில் கழகத்துக்கு நோர்வே நாட்டினர் விஜயம்

(நெல்லியடி)

கிராமிய மீளமைப்பு நிறுவனத்தின் நோர்வே நாட்டைச் சேர்ந்த 9 பேர் அச்சுவேலி வடக்கு சிறு கைத்தொழில் அபிவிருத்திக் கழகத்திற்கு விஜயம் செய்திருந்தனர்.

இவர்கள் மேற்படி கழகத்தின் கைத்தொழில் உற்பத்திகளை பார்வையிட்டதுடன் கிராமிய வீடமைப்பு நிறுவனத்தால் நடாத்தப்படும் பாலர் பாடசாலைக்கும் விஜயம் செய்தனர்.

இச்சிறு கைத்தொழில் அபிவிருத்திக் கழகத்தின் உற்பத்திப் பொருட்களின் ஆரம்ப விற்பனை இவர்களது முன்னிலையில் தலைவர் திரு. கணபதிப்பிள்ளையினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

விவசாயிகளுக்கு

## அடையாள அட்டை வழங்குவதில் சாதனை

(யாழ்ப்பாணம்)

விவசாய அடையாள அட்டை வழங்குவதில் கோண்டாவில் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. இ. கா. சிவராசா சாதனை நிலைநாட்டியுள்ளார்.

சுமார் ஒருவார காலத்தில் நானூறுக்கு மேற்பட்ட அடையாள அட்டைகளை இவர் வழங்கியுள்ளார். மிகக் குறுகிய காலத்தில் இவ்வளவு பெருந்தொகையான விவசாய அடையாள அட்டைகளை வழங்க அவர் எடுத்த முயற்சி ஏனைய விவசாயிகளுக்கும் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களுக்கும் முன்மாதிரியை ஏற்படுத்தியுள்ளதாக பலரும் அவரைப் பாராட்டியுள்ளனர்.

## சாராயம் காய்ச்சலாம்

புதுடில்லி, ஏப். 10

சொந்தத் தேவைக்கு சாராயம் காய்ச்ச மத்தியப் பிரதேச அரசு அனுமதிவழங்கியுள்ளது. (இ)

# யாழ். நகரில் மீண்டும் போலியோ

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் மீண்டும் போலியோ நோய் பரவத் தொடங்கியிருப்பதாகச் சந்தேகிக்கப்பட்டுத் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

டாக்டர் ஏ.எல். ஏபிரகாமிடம் நேற்று சிகிச்சை பெறச் சென்றவர்களில் மூவர் போலியோ நோயால் பிடிக்கப்பட்டுள்ளதைக் கண்ட டாக்டர் ஏப்ரகாம் இதுபற்றி உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மேயரினதும் உதவி மேயரினதும் கவனத்துக்குக் கொண்டு வந்தார். இதைத் தொடர்ந்து பாடசாலை வைத்திய அதிகாரியின் உதவியுடன் குருநகரில் மூன்று சனசமூக நிலையங்களில் போலியோ தடுப்பு மருந்து வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காரைநகர்

## வைத்தியசாலைக்கு ரூபா 37,500 ஒதுக்கீடு

[சித்தன்கேணி]

வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு 1980-ம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் காரைநகர் கிராம இரகினர் வைத்தியசாலை கட்டிடங்களை திருத்தியமைப்பதற்கு 37,500 ரூபாவை ஒதுக்கியுள்ளார். (இ)

## ரத்தத்தின்...

(-4ம் பக்கத் தொடர்ச்சி)

ராதிகா ஆகிய ஐவரது ஒத்துழைப்புடன் இலங்கை நடிகர்களையும் நடிக்கவைத்து படத்தை எடுத்துள்ளோம். கதாநாயகனுடன் நடிப்பது ஈழத்து கதாநாயகி. நாகேஷின் மனைவியாக நடிப்பது யாழ்ப்பாணத்து நடிகை ராஜேஸ்வரி. சற்றும் விட்டுக்கொடுக்காமல் — சளைக்காமல் நாகேஷுடன் நமது டிங்கிரி நடித்துள்ளார். தவிர, முக்கிய பாத்திரங்களுக்கு இணையாக நமது நடிகர்களும் பங்குபற்றி சமவாய்ப்புப் பெற்றிருப்பது ''ரத்தத்தின் ரத்தமே'' படத்துக்குக் கிடைத்த வெற்றியாகும். இப்படத்தில், திருவாளர்கள் தர்மலிங்கம், ஸ்ரீநடராஜா மற்றும் கதாநாயகி கீதாகுமாரசிங்க, அஜேஜா ஆகியோரும் தத்தமது பாத்திரங்களை உணர்ந்து கச்சிதமாக நடித்திருக்கின்றனர். டைரக்டர் ஜீஜாதேவ் ஆனந்தின் நெறிப்படுத்தலில், வண்ணம் அள்ளித் தெளிக்கப்பட்டிருக்கிறது. அத்தனையும் உங்களுக்குத்தான்!

கடைசியாக ஒருவார்த்தை— இலங்கையிலும் தமிழ்ப் படம் எடுக்கலாம்; இந்தியாவிலும் அதனைத் திரையிட முடியும் என்ற ஒரே இலட்சியத்துடன் நண்பர் எஸ். கே. அரியரத்தினமும் அவருக்கு உதவியாக நானும் தயாரித்துள்ள 'ரத்தத்தின் ரத்தமே' படம் ஒரு இலட்சியப்படைப்பு! இந்தியாவிலும் திரையிட இப்பொழுதே விநியோகஸ்தர்கள் கேட்டிருப்பதிலிருந்து அதன் வளர்ச்சியை எங்களால் உணர முடிகிறது. எமது இலட்சியம் நிறைவேறிய பூரிப்பு ஏற்படுகிறது. ஆனாலும், எம்மைத் தூக்கிவிடுபவர்கள் ஈழத்து அன்பு ரசிகர்கள் தான்! ஆக்கபூர்வமான உங்கள் ஆதரவில் தான் எமது வளர்ச்சி — இலங்கைத் தமிழ்ப்பட முன்னேற்றம் உண்டு! இதனை மட்டுமே இதயத்தில் எண்ணி, இரு கரம் கூப்பி உங்களை அழைக்கின்றோம்! 'மிறைட்டன் பிலிம்ஸாரின் கன்னிப் படைப்பாக —— வெற்றிப் படைப்பாக வெளியாகியிருக்கும் இப்படத்தை எமது ரத்தத்தின் ரத்தங்கள் கரம் தூக்கிவிடுவார்கள் —— ஆதரவளிப்பார்கள் என்பது எங்கள் தீர்க்கமான முடிவு. ஈழத்து திரைப்படத்துறையில் நாம் இப்பொழுது வைத்திருப்பது முதல் அடி என்னலும்; ஈழத்தின் தமிழ்த் திரைப்படத் துறையில் இது ஒரு திருப்பு முனையாக, தாக்கமுள்ள —— —யதார்த்தபூர்வமான அடியாக இருக்கும் என்பதே எங்கள் நம்பிக்கை. அந்த நம்பிக்கை நல்லபடி வளரட்டும். நன்றி.

## மின்சாரத்துக்கு ரூபா 97,200

(சித்தன்கேணி)

வட்டுக்கோட்டைத்தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு கலைநகர் கிராமத்துக்கு மின்இணைப்பு ஏற்படுத்துவதற்கு 1980 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் 97,200 ரூபாவை இலங்கை மின்சாரசபைக்கு ஒதுக்கியுள்ளது. இக்கிராமத்திலுள்ள சிலவீதிகளுக்கு இலங்கை மின்சாரசபை விரைவில் மின்இணைப்புக்கான வேலைகளை ஆரம்பிக்க இருக்கின்றது.

# ரூ. 5,500 செலவில் செய்யும் பூஜைக்கு ஓராண்டு காலம் காத்திருக்க வேண்டும்

## நெருக்கடி காரணமாக குருவாயூரில் ரூ. 1000 பூஜை செய்கின்றனராம்

குருவாயூர், ஏப். 10

குருவாயூர் ஸ்ரீகிருஷ்ணர் ஆலயத்தில் 5 ஆயிரத்து 500 ரூபா செலுத்திச் செய்யப்படும் உதயாஸ்தமன பூஜைசெய்துகொள்ளவிரும்புபவர்கள் இன்னும் ஓராண்டு காலம் காத்திருக்க வேண்டும் என்று கோயில் நிர்வாகிகள் அறிவித்துள்ளனர்.

சிறப்புமிக்க இப்பூஜையைச் செய்வதற்கு 1981ம் ஆண்டு மார்ச் மாதம்வரை பக்தர்கள் தமதுபெயர்களைப் பதிவுசெய்துள்ளனராம்.

ஒவ்வொரு உதயாஸ்தமன பூஜைக்கும் அடுத்தநாள் ஸ்ரீபூதபலி நடக்கும் எனவே உதயாஸ்தமன பூஜை ஒருநாள்விட்டு ஒருநாள் மட்டுமே நடைபெறும் ஸ்ரீபூதபலி தினத்தன்று ஆலயத்தைச் சுற்றியுள்ள 6000 எண்ணெய் விளக்குகளும் ஏற்றப்படும். இதற்கு மட்டும் 2 ஆயிரம் ரூபா செலவாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

உதயாஸ்தமன பூஜை செய்ய திகதி கிடைக்காதவர்கள் ஆயிரம் ரூபா செலுத்தி 'உஹஸ்ஸ' என்ற ஒருநாள் பூஜையை நடத்துகிறார்களாம். [இ]

## மகோற்சவம் நடைபெறாது

(பண்டத்தரிப்பு)

பிரசித்தி பெற்ற மாதகல் நுணசை முருகமூர்த்திகோவில் வருடாந்த மகோற்சவம் இவ்வருடம் நடைபெறமாட்டாது.

இக்கோவில் புனரமைப்பு வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன. திருத்த வேலைகள் யாவும் முடிவடைந்தவுடன் இம்மாதம் இறுதியில் கும்பாபிஷேகம் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டு வருவதாக ஆலய தர்மகர்த்தா தெரிவித்தார்.

......

## சனசமூக நிலைய ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

வண்ணார் பண்ணை கொண்டலடி விநாயகர் சனசமூக நிலையத்தின் 2வது ஆண்டு விழா யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெறுகிறது. கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

(நெல்லியடி)

அச்சுவேலி காளிஅம்மன் கோயிலில், மண்டபமொன்றை அமைக்கும் வேலைகளில் சர்வோதயத் தொண்டர்கள் ஈடுபட்டு வருகின்றார்கள். இம் மண்டபத்தினை அமைக்கும் வேலைகளை அச்சுவேலி வடக்கு கிராம சேவகர் திரு எம். சோமசுந்தரம் ஆரம்பித்து வைத்தார்.

## நவீன பஸ்நிலையம்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு, உதவி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக பண்டத்தரிப்பைச் சேர்ந்த திரு என். தேவநாயகம் கிராம அபிவிருத்தி அபைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

## மின்னொளியில் கரபந்தாட்டம்

(சாவகச்சேரி)

இடைக்காடு சனசமூக நிலையத்தார் மின்னொளியில் நடாத்தும் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் நாளைய நிகழ்ச்சிகள்

6 பேர் ஒவர்ஆட்டத்தில்— உதயதாரகை வி. க. சிறுப்பிட்டி 'ஏ' எதிராக உதயசூரியன் வி. க. புத்தூர் மேற்கு 'ஏ' யும்,

கம்பர்மலை யூனியன் வி. க எதிராக கதிரிப்பாய் முரசொலி வி. க. 'பி'யும்.

உடுப்பிட்டி உதயசூரியன் வி. கழக 'ஏ' பிரிவுக்கு எதிராக சிறுப்பிட்டி உதயதாரகை வி கழக 'பி' பிரிவும்

4 பேர் ஒவர் ஆட்டத்தில் கதிரிப்பாய் முரசொலி வி. க. 'பி' பிரிவு எதிர் கம்பர்மலை யூனியன் வி கழகமும்,

சிறுப்பிட்டி உதயதாரகை வி. க. 'பி' பிரிவுஎதிர் இடைக்காடு கலைமகள் வி. கழகமும் மோதுகின்றன.

## உரைநூல் அரங்கேற்றம்

[யாழ்ப்பாணம்]

கீரிமலை நகுலகிரிப் புராண உரைநூல் அரங்கேற்றம் நாளை சனிக்கிழமை மாலை கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய மண்டபத்தில் இடம்பெறுகிறது.

கீரிமலை சிவநெறிக் கழகப் பிரதித் தலைவர் பண்டிதர் இ. நமசிவாயம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் சிவநெறிக் கழகத் தலைவர் சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள் ஆசியுரை வழங்குவார்.

திரு. கே. கனகராசா உரையாசிரியருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பார். [இ]

# எண்ணெய் விலை அதிகரிப்பை சமாளிக்க ஈராக் கடனுதவி

(கொழும்பு)

எண்ணெய் விலை அதிகரிப்பைச் சமாளிப்பதற்காக ஈராக் இலங்கைக்கு 8 கோடி 83 லட்சம் ரூபாவைக்கடனாக வழங்க முன்வந்துள்ளது.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் ஈராக்கிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெயின் அதிகரித்த விலையை இக்கடன் உதவி மூலம் சரிக்கட்ட முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. வட்டியில்லாக் கடனாகவே இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது. (இ)

# 'ஆங்கிலத்தை புறக்கணித்தது எதிர்காலத்துக்கு ஆபத்து''

## மாணவர்களுக்கு அறிவுரை

(பாவிட்டபுரம்)

''மாணவர்களுக்கு இன்று அதிக வசதிகள் வாய்ப்புகள் அதிகரித்துள்ளதன் காரணமாக ஆசிரியர்கள் அவர்களுக்கு கற்பிக்க வேண்டிய தேவையில்லாமல் உள்ளது. இன்றைய நிலையில் மாணவர்கள் மத்தியில் உள்ள ஆற்றலை தூண்டிவிடுவதிலேயே ஆசிரியர்கள் கவனம் செலுத்த வேண்டியவர்களாக உள்ளனர்''.

இவ்வாறு கொல்லங்கலட்டி சைவ வித்தியாசாலை ஸ்தாபகர் நினைவு விழா பரிசளிப்பு விழா ஆகியவற்றில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் திரு. சோமசுந்தரம் கூறினார்.

அதிபர் திரு. வ. மகாலிங்கம் தலைமையில் நடந்த இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது மாணவர்களது வளர்ச்சியில் பெற்றோர் அதிக கவனம் ஆசிரியர்களிடமே மாணவர்களது பொறுப்பை விட்டு அவர்களையே குறை சொல்லும் நிலைக்குச்சில பெற்றோர் வந்துள்ளனர் இது கவலைக்குரியது.

மாணவர்கள் ஆங்கிலக் கல்வியை புறக்கணித்துவிடுவது அவர்களது எதிர் காலத்துக்கு நல்லதல்ல. ஆங்கிலம் கற்பதால் பல்வேறு பயன்களைப் பெறமுடியும். ஏனைய பல்கலைக்கழகங்களைவிட யாழ். பல்கலைகழகம் ஆங்கிலத்தை வளர்ப்பதையிட்டு நாம் பெருமைப்பட வேண்டும்'' என்றார்.

ஸ்தாபகர் நினைவுப் படத்தை திரைநீக்கம் செய்து பேசிய முன்னாள் வைத்தீஸ்வரா அதிபர் திரு. ச. அம்பிகைபாகன், கல்வி முறையில் அடிக்கடி மாற்றம் ஏற்படுத்தக்கூடாதென்றும் நிரந்தர கல்வித் திட்டம் ஒன்று உருவாக்கப்படல் வேண்டுமென வும் கல்வித் திட்டங்களை உருவாக்க கல்விமான்களின் ஆலோசனை பெறப்பட வேண்டும் எனவும் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தின் ஒரு வெற்றிப் படமாக இன்று வெளியாகும்

# பிறைட்டன் பிலிம்ஸாரின் 'ரத்தத்தின் ரத்தமே'





ஈழத்து திரைப்பட வரலாற்றில இன்று - ஏப்ரல் பதினோராம் திகதி - ஒரு முக்கிய தினமாகும்!

இன்றுதான், ஈழத்தின் முதல் வண்ணத் தயாரிப்பான ''ரத்தத்தின் ரத்தமே'' தமிழ்ப் படம் வெள்ளித்திரைக்கு வருகிறது!

இப்படி நான் அழுத்தமாகக் கூறுவதற்கு மூன்று காரணங்கள் உண்டு.

**க. ஜெயபாலசிங்கம்**
(உதவிப் படத்தயாரிப்பாளர்)

● முதலாவது- முழுக்க முழுக்க ஈழத்தில் குறுகிய காலத்தில் தயாரிக்கப்பட்ட முதல் வண்ண-ஈஸ்ட்மன்கலர்-படம்இது.

● இரண்டாவது-தமிழகத் திரைப்படங்களுக்கு இணையாக-சற்றும் வளைந்து நெளியக்கூடிய முறையில் அமையாது-தயாரான இலட்சியப் படம் இதுவாகும்.

● மூன்றாவது-ஈழத்து நடிகர்களை ஒதுக்கித் தள்ளாமல், அவர்களுக்கும் சமவாய்ப்பளித்து தயாரிக்கப்பட்ட படம் ''ரத்தத்தின் ரத்தமே''

இந்த மூன்று முக்கிய,சிறப்பு அம்சங்களும் ஒருங்கிணைந்திருப்பதால், ஈழத்து திரைப்பட வரலாற்றில் இன்றைய தினத்தை ஒரு முக்கியநாள் என்று கூறிக்கொள்வது பொருத்தம் தான்.

ஆனாலும் சில சந்தேகங்களை நீக்கி போதுமான விளக்கங்களை எமது ரசிகப்பெருமக்களுக்குக் கூறவேண்டியது எங்களின் ஒரு கடமை என்று நான் கருதுகிறேன்.

ஈழத்தில் தயாரான ஒரு தமிழ்ப்படம் தியேட்டர்களில் ஓடிக்கொண்டிருக்கையில் "ரத்தத்தின் ரத்தமே"படமும்அதே கால கட்டத்தில் வெளிவரத்தான் வேண்டுமா? இப்படி ஒரு கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

''ரத்தத்தின் ரத்தமே'' வண்ணப்படம், சில முக்கியமான நோக்கங்களையும், திட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டு தயாரானது. தயாரிப்பு வேலைகள் தொடங்கிய பொழுதே,"ஷூட்டிங்'ஆரம்பமான காலத்திலேயே; 'இத்தனை நாட்களில் படத்தை முடித்தே ஆகவேண்டும்.' என்றும், ஏப்ரல் மாதத்தில் - புது வருடகாலத்தில் எப்படியும் படத்தை வெளியிட்டே ஆகவேண்டும்என்பதும்எமது அடிப்படை நோக்கமாக இருந்தது. இதனைக் கருத்திற்கொண்டே நாம் இயங்கினோம்-நடிகர்களையும், கலைஞர்களையும் இயங்க வைத்தோம்! இவ்விதமாக நாம் செயல்பட்டது தவறு என்று யாரும் கருதினால், அதனை எப்படி ஏற்றுக்கொள்வது?

இலங்கையில் தமிழ்ப்படங்கள் தயாரிப்பது ஒரு விஷப் பரீட்சை என்பது, நம்மவருக்குப் புரியும். பெரும் பெரும் படமுதலாளிமார்களே இதில் தோல்விகண்டு, சிங்களபட உலகில் மூழ்கியிருக்கும் போது, 'பிறைட்டன் பிலிம்ஸார்' மட்டும் இந்த விஷப்'பரீட்சை'யில் எப்படி கவலையீனமாக 'தோற்ற'முடியும்? திட்டமிட்டோம்; செயல்பட்டோம்; திரைப்படத்தை பல சிரமங்கள் மத்தியில் வெற்றியுடன் முடித்துக்கொண்டோம். இன்று மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம். இதில் என்ன தவறு? நினைமை இவ்விதமிருக்க; இரண்டுவருடங்களுக்கு மேலாக ஆடி, ஓடி அலைந்துதிரிந்து ஒரு படத்தை எடுத்து வெளியிடுவது...?எந்த விதத்திலும் இதனை ஒரு 'போதல்' என்று வர்ணிக்க முடியாது!

இலங்கையில் தமிழ்ப்படங்கள் எடுப்பது ஒரு விஷப் பரீட்சை என்றால்; மற்றவர்களைப்போல் நாமும் தான் அந்த விஷத்தனமான பரீட்சையில் இறங்கியிருக்கின்றோம். பரீட்சையில் திறமையாக சித்தி பெறுவதென்றால் நன்றாகப் 'படி'த்தே ஆகவேண்டும்.இது நியதி பரீட்சையில் திறமையாக எழுதியவன்தான் சித்தியடைவான் என்றால், அதற்கு வேறு விளக்கமும் அவசியமா?

மற்றுமொரு சந்தேகம்-

செக்ஸ், சண்டையை வைத்துத்தான் படம் எடுக்க வேண்டுமா என்பது.

இதற்கு அதிகமான விளக்கம் தேவையில்லை காரணம்; சிறந்த கதை ஓட்டங்களைக் கொண்ட தமிழ்நாட்டின் பல இலட்சியப்படங்களே தோல்வி கண்டிருக்க கன்னிப்படைப்பைக் கொண்ட நாம் மட்டும் ஏன் விதிவிலக்கு? ஆனாலும் ''ரத்தத்தின் ரத்தமே'' இதிலும் ஒரு புதுமையைக்கொண்டது.

''ரத்தத்தின் ரத்தமே''-ஒரு ஜனரஞ்சகமான படம். பண லாபத்தை மட்டும் கருதி நாம் படமெடுக்கவில்லை இலட்சியத்துடன் இழையோடும் படக்கதையை இங்கு நீங்கள் காணலாம்! நமது நாட்டில் போதை வஸ்துக்கள் அதிகமாக நடமாடுகிறது என்பதும் போதைவஸ்து கடத்தல சந்தையில நமது நாடும் ஒரு முக்கிய இடம்வகிக்கிறது என்பதும் பொலிசாரின் கருத்து. போதைவஸ்துகளால் ஏற்படும் ஆபத்து, அதனால் உண்டாகும் தீமைகள்; இதனால் இளைஞர்கள், பெண்களுக்கு ஏற்படும் இன்னல்கள் ஆகியவற்றை இப்படம் தெளிவாக விளக்கிறது. நமது நாட்டு இளையசமுதாயத்தினரின் ஒரு பகுதியினரைப் பிடித்திருக்கும் ஒரு கொடிய 'நோயை' வெளிக்காட்டி அதன் தாக்கங்களை உணர வைப்பது, சமுதாயத்துக்குச் செய்யும் ஒரு தொண்டாகக் கருதுவது தவறென்றால் அப்படிக்கருதும் சிலரது கற்பனைக் கதைகளை நம்பவும் நாம் தயாரில்லை. ரசிகப்பெருமக்களும் அவர்களுக்கு காது கொடுக்கமாட்டார்கள்!

## "ஒரு இலட்சியம் நிறைவேறுகிறது"

இலங்கையிலும் நல்ல படம்; தமிழகத் திரைப்படங்களுடன் சவால்விட்டு ஓடக்கூடிய திரைப்படம் தயாரிக்கமுடியும் என்பதை நிலைநாட்டுவதே ''ரத்தத்தின் ரத்தமே'' படத்தின் அடிப்படை நோக்கம். அதனை ஓரளவு நிறைவேற்றி விட்டோம் என்றுதான் நாம் கருதுகின்றோம்; மிகுதி ரசிகப் பெருமக்களுடையது! சரி தானே?

''பிறைட்டன்பிலிம்ஸா''ரின் ''ரத்தத்தின் ரத்தமே'' படப்பிடிப்புவேலைகள் ஐந்து மாதங்களுக்கு முன்னர் ஆரம்பித்து திட்டமிட்டபடி குறுகியகாலத்துக் குள்ளேயே பூர்த்தியாகி விட்டன. படப்பிடிப்பை, நடிகர் திலகம் சிவாஜிகணேசனும், டைரக்டர் ஸ்ரீதரும் கடந்த வருடம் நவம்பர் மாதம் தொடக்கிவைத்திருந்தார்கள். இது ஒரு இலங்கைத் தயாரிப்பு. அரசாங்கத்தின் சில சலுகைகளைப் பயன்படுத்தி, தமிழக நடிகர்களான ஜெய்சங்கர், நாகேஷ், அசோகன், ஜெயச்சந்திரன்,





[4-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1,500 வீடுகளைப்பொலிசார் தீயிட்டுக் கொளுத்தினர்!

புதுடில்லி, ஏப் 10
மேற்கு வங்காளத்தில் உள்ள மதிதண்டு கிராமத்தில் 1,500 குடிமனைகளைப் பொலிசார் தீயிட்டுக் கொளுத்தினர் என அறிவிக்கப்பட்டது.

கடந்த வாரம் இரண்டு பொலிசார் இக்கிராம மக்களினால் கொலைசெய்யப்பட்டதை அடுத்தே பொலிசார் இந்தச் செயலைமேற்கொண்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

மேற்கு வங்காளத்தில் பீகார் எல்லையில் உள்ள இக்கிராமத்தின் குடிசைகளே பொலிசாரினால் தீயிடப்பட்டன.

இங்கு அமைதியை நிலைநாட்டும் பொருட்டு பொலிசாருக்குப் பதிலாக இராணுவத்தினர் அழைக்கப்பட்டுள்ளனர். [இ]

# இஸ்ரேலியப் படைகள் லெபனனுக்குள் ஊடுருவல்!
## பாலஸ்தீனருக்குப் பதிலடி

ஜெருஸலம், ஏப் 10
இஸ்ரேலியப் படைகள் தென்லெபனன் எல்லையூடாக லெபனனுக்குள் பல மைல் தூரம் ஊடுருவி பல பாதுகாப்பு நிலைகளை அமைத்துவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

30 டாங்கிகள், கவச வண்டிகள் சகிதம் 300 இஸ்ரேலிய வீரர்களைக் கொண்ட படைப்பிரிவே இந்த ஊடுருவலை நடத்தியுள்ளது.

கடந்த வாரம் இஸ்ரேலுக்குள் புகுந்த பாலஸ்தீன கொமாண்டோக்கள் குடியிருப்புப்பகுதி மீது நடத்திய திடீர் தாக்குதலுக்குப்பதிலடிகொடுக்கும்வகையிலேயே இஸ்ரேலியப்படைகள் இந்த ஊடுருவலை மேற்கொண்டுள்ளதாக இஸ்ரேலிய இராணுவ அதிகாரி ஒருவர் கூறினர்.

**ஐ. நா- கண்டனம்**

இதேவேளையில் இஸ்ரேலின் இந்த நடவடிக்கையை ஐக்கிய நாடுகள் சபை கண்டித்துள்ளது. (இ)

பெரியார் நினைவாக

# தமிழகத்தில் மருத்துவக்கல்லூரி

சென்னை, ஏப். 10
பெரியார் ஈ. வெ ராவின் நினைவாக தமிழகத்தில் மருத்துவக் கல்லூரி ஒன்று நிறுவப்படவுள்ளது.

இவ்வருடம் செப்டம்பர் மாதம் 17ம் திகதிமுதல் இயங்க ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படும் இம்மருத்துவக் கல்லூரியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கும் வெளிநாட்டில் உள்ள மாணவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

இத்தகவலைப் பெரியார் ஞாபகார்த்த சபை செயலாளர் திரு. கே. வீரமணி தெரிவித்தார்.

இம்மருத்துவக் கல்லூரி நிறுவுவது தொடர்பான பணிகளைக் கவனிக்க மருத்துவ நிபுணர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினர்.

## மணி அம்மையார் ஞாபகார்த்த தொழில் நுட்பக்கல்லூரி

பெரியாரின் மனைவி மணி அம்மையாரின் ஞாபகார்த்தமாக பெண்களுக்கென தொழில் நுட்பக் கல்லூரி ஒன்று அமைக்கப்படும் இதுவே தமிழகத்தின் முதலாவது பெண்கள் பல்தொழில்நுட்ப நிறுவனம் என்றும் அவர் கூறினர். [இ]

# காமன் வெல்த்தில் சிம்பாப்வே சேர்க்கப்படும்

லண்டன், ஏப். 10
இம்மாதம் சுதந்திரம் அடையும் சிம்பாப்வேயும் 'காமன் வெல்த்' அமைப்பில் சேர்த்துக் கொள்ளப்படும்.

இத்தகவலை காமன்வெல்த் தலைவர் திரு. ரம்பால் தெரிவித்தார். [இ]

# இரு வீரர்களுடன் 'சோயுஸ்-35' விண்கலம்

மாஸ்கோ, ஏப் 10
சோவியத் யூனியன் நேற்று இரு விண்வெளிவீரர்களுடன் விண்கலம் ஒன்றை அனுப்பியுள்ளது.

'சோயுஸ்-35' என்றுஅழைக்கப்படும் இவ்விண்கலம் தற்போது விண்வெளியில் ஆய்வு நடத்திவரும் 'சல்யூட்-6' விண்கலத்துடன் இணைந்து மேலும் ஆய்வு நடத்தும். [இ]

# ஈராக்--ஈரான் எல்லையில் கடும் பீரங்கிச்சண்டை!

தெஹ்ரான், ஏப். 10
ஈராக்-ஈரான் எல்லையில் இரு நாட்டுப்படைகளுக்குமிடையே கடும் பீரங்கிச் சண்டை நடைபெற்றுள்ளதாக தெஹ்ரான் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈராக்கிலிருந்து ஆயிரக்கணக்கான ஈரானியர்கள் வெளியேற்றப்பட்டதை அடுத்து இரு நாட்டுக்குமிடையேயான உறவில் நெருக்கடி தோன்றியதைத் தொடர்ந்தே இச்சண்டை நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று நடைபெற்ற பீரங்கிச் சண்டை நான்கு மணி நேரம்நீடித்தது என்றும் இடையிடையே ஹெலிகொப்டர் தாக்குதல் இடம்பெற்றதாகவும் அறிவிக்கப்பட்டது. (இ)

# ரயிலில் ஏற அவசரம்: பரிதாபமாக ஒருவர் மரணம்

(மன்னார்)
ரயில் நித்தமுன்னர் அவசரமாகப் பாய்ந்து ஏறியவர் புகையிரத மேடைக்கும் தண்டவாளத்திற்குமிடையில் தவறி விழுந்து கோரமாக மரணமானார்.

மன்னார் சுங்கப்பகுதி ஊழியர் ஆர். சி. பெர்னாண்டோ என்பவரே இப்படி மரணமானவராவார். தலைமன்னார் பியரிலிருந்து கொழும்புக்குச் செல்லவிருந்த ரயிலில் இடம் பிடிப்பதற்காகப் பாய்ந்து ஏறியவர் தவறிவிழுந்துவிட்டதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. இவர் உடனடியாக தலைமன்னார் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் மன்னார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார். உள்காயங்களாலேயே இவருக்கு மரணம் சம்பவித்ததுஎன்று அறிவிக்கப்பட்டது.

மரணவிசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி பி. எம். ஏ. ஜபார் விபத்து மரணம் என்று தீர்ப்பளித்தார்.

# பாம்புத்தொல்லை

[மன்னார்]
பேசாலையில் பாம்புகள் தொல்லை அதிகரித்துள்ளது. பலர் பாம்பினால் கடியுண்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த மாதம் சித்திக் மொகமட் என்னும் தொழிலாளி இரத்தப் புடையன் பாம்பினால் கடியுண்டு மரணமானார்.

அஸாம் பிரச்னையை

# மனிதாபிமான ரீதியில் தீர்க்கவே அரசு விரும்புகிறது
## உள்துறை அமைச்சர் கூறுகிறார்

புதுடில்லி, ஏப். 10
மனிதாபிமான அம்சங்களையும் நாட்டின் சர்வதேசக் கடமைப் பொறுப்பையும் கருத்தில்கொண்டு அஸாம்பிரச்னைக்குத் தீர்வுகாண ஆவன செய்யப்படும்.

இவ்வாறு இந்திய உள்துறை அமைச்சர் திரு. ஸயில்சிங் கூறியுள்ளார்.

பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:

கிளர்ச்சிக்காரர்களின் கோரிக்கைகள் பலவற்றை அரசுஏற்கனவேஏற்றுக்கொண்டுள்ளது.

இந்நிலையில் அஸாம் பிரச்னைகளுக்குப் பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்வுகாண அரசு விரும்புகிறது. (இ)

# இன்றைய தமிழ் இசை விழா நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தினரின் தமிழிசை விழாவின் இன்றைய இறுதி நிகழ்ச்சிகள். இவை நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற விருக்கிறது.

மாலை 5-45 மணி அண்ணாமலை இசைக்கல்லூரி மாணவிகள் பாட்டு.

6 30 மணி செல்வி நாகம்மா கதிர்காமர் பாட்டு, திரு. வி. கே. குமாரசாமி வயலின் திரு. பி. சின்னராசா மிருதங்கம்.

7-45 9-00 மணி திரு.எஸ் சண்முகராகவன் பாட்டு, செல்வி தனதேவி சுப்பையா வயலின் திரு எஸ். பிரணவநாதன் மிருதங்கம்.

9-00 — 10-15 மணி கோண்டாவில் வி. கே. கானமூர்த்தி வி. கே. பஞ்சமூர்த்தி நாதஸ்வரம் எம். முருகானந்தன் பி. கணேசன் தவில்.

பின்வரும் கலைஞர்கள் கடம் கஞ்சிரா. மூகர்சிங் கொன்னக்கோல் ஆகிய வாத்தியங்களைச் சமயோசிதமாக வாசிப்பார்கள்.

திரு. எம். சிதம்பரநாதன், திரு. எஸ். மகேந்திரன், திரு. எம்.ஜேம்ஸ், திரு ந. சிவானந்தன், செல்வன் ப.கிருபாகரன் செல்வன் ஏ. ரகுநாதன் செல்வன் து. ராஜன் திரு. எஸ் சுப்புசாமி திரு. எஸ். [illegible] செல்வன் க. தவரத்னராஜா

# இந்திராவுக்கு எதிரான மற்றொரு வழக்கு தள்ளுபடி

புதுடில்லி, ஏப். 10
இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி மீது அவரது மூன்னாள் உதவியாளர் திரு. ஆர். கே. தவன், திரு. கே. சென் ஆகியோர் மீது தாக்கல் செய்யப்பட்டிருந்த மற்றுமொரு வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது.

நான்கு உயர் அதிகாரிகளைக் கடமைசெய்யவிடாது துன்புறுத்தியதாக ஜனதா அரசு இவர்கள் மீது தாக்கல்செய்திருந்தது.

மாஜிஸ்டிரேட் திரு. அகர்வால் முன்னிலையில் எடுக்கப்பட்ட வழக்கே தள்ளுபடி செய்யப்பட்டது. [இ]

# தாதிகளுக்கு விசேடபயிற்சி

(பண்டத்தரிப்பு)
புதிதாக தெரிவுசெய்யப்பட்ட தாதிகளுக்கான மூன்று வருடப் பயிற்சிநெறி இம்மாதம் 16ந் திகதி யாழ்.தாதிகள் பயிற்சிப் பாடசாலையில் ஆரம்பமாகிறது.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் ஊழியர்களாகக் கடமையாற்றும் ஆறு பேர் கடந்தமாதம் கொழும்பில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையொன்றின்மூலம் இப்பயிற்சிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களைத்தவிர யாழ் மாவட்ட சுகாதாரப் பிரிவில் கடமையாற்றும் சிற்றூழியர்கள் சிலரும் இப்பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

# இந்திராகாங்கிரஸ் தவிர்ந்த மற்றைய கட்சிகளுடன் தொகுதி ஏற்பாடு
## மக்கள் கட்சித்தலைவர் சரண்சிங்கூற்று

புதுடில்லி.ஏப் 10
இந்திய மக்கள் கட்சி (லோக்தள்) எந்தக் கட்சியுடனும் கூட்டு ஒப்பந்தம் செய்து கொள்ள மாட்டாது

இவ்வாறு மக்கள்கட்சித்தலைவர் பி.சரண்சிங் தெரிவித்துள்ளார்.

நடைபெற இருக்கும் சட்டசபைத் தேர்தலுக்காக இந்திரா காங்கிரஸ் தவிர்ந்த ஏனைய கட்சிகளுடன் மக்கள் கட்சித் தொகுதி ஏற்பாடுகளைச் [illegible] என்றும் அவர் கூறினர். (இ)

# நியமனம்

(மன்னார்)
மன்னாரில் 6லட்சம் ரூபா செலவில் புதிய நவீன பஸ் நிலையம் அமைப்பதற்கான நிர்மாண வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

இதற்கான கேள்விப் பத்திரங்களை வடபிராந்திய போக்குவரத்துச் சபை தற்போது கோரியுள்ளது.

# பாக்.இல் 7 லட்சம் ஆப்கான் அகதிகள்

இஸ்லாமாபாத் ஏப்.
ஆப்கானிஸ்தான் நெருக்கடிக்குத் தீர்வுகாணப்படாததை அடுத்து பாகிஸ்தானில் [illegible] அகதிகளின் [illegible] 7 [illegible] அதிகரித்துள்ளது [இ]

# டிட்டோவின் 88-வது பிறந்தநாள

பெல்கிரேட், ஏப். 10
கடும் சுகவீனமுற்றிருக்கும் யுகோஸ்லாவிய அதிபர் மார்ஷல் டிட்டோவின் 88-வது பிறந்ததினவிழாவைஇம்மாதம் 22ந் திகதி வெகு விமரிசையாகக் கொண்டாட யுகோஸ்லாவிய மக்கள் இப்போதிருந்தே ஏற்பாடுகள் செல்கின்றனர். (இ)

# நீர்வள ஆராய்ச்சி

(யாழ்ப்பாணம்)
சாவகச்சேரித் தொகுதிக்கான குடிநீர் விநியோகத் திட்டத்தின்கீழ் அமெரிக்க உதவித் திட்டத்தினைச் சேர்ந்த நீர்வள ஆய்வாளர் திரு டெய்லர், கொடிகாமம், மிருசுவில் பகுதிகளில் உள்ள கிணறுகளை ஆய்வு செய்தார்.

குடிநீர் விநியோகத்திற்கான வளங்கள் இவ்விடங்களில் அதிகம் காணப்படுவதாகவும் அவர் கருத்து வெளியிட்டார்.

இந்த நிபுணருடன் நீர்வளச் சபை முகாமையாளர் திரு. குணசேகரமும் கலந்து கொண்டார். (செ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5th CROWDED WEEK
**REGAL** JAFFNA Phone: 360
Daily 4 shous
Daily at 3 m. 3-00, 4-40, 7-00 & 9-40 p.m.
ROGER MOORE as JAMES BOND
**LIVE AND LET DIE**
(More suited for Adults)

ராஜா - (யாழ்நகர்) கடைசி வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா-கவிதா-சந்திரமோகன்
நடித்த
**ஜெனரல் சக்கரவர்த்தி**
ஈஸ்ட்மன் வர்ணச் சித்திரம்

வெலிங்டன் Daily 10-30 a. m., 2-15, 4-45, 7-00, & 9-30 p.m.
(யாழ்ப்பாணம்)
**Horror of Frankenstein**
(Strictly for Adults)

லிடோ தினசரி 10-30, 2-30, 4-45, 7-15 & 9-30
(யாழ்.நகர்) போன்: 7698
**DIAMONDS**

ராணி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
ஸ்ரீகாந்த், மலேசியா சிவாஜி ராஜா, மனோகுமார்
நடித்த
**நெஞ்சுக்கு நீதி**
இது ஒரு இலங்கை - இந்திய - மலேசிய கூட்டுத் தயாரிப்பு

மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்-எல். விஜயலட்சுமி
**வல்லவன் ஒருவன்** (புதிய பிரதி)
12-4-80 முதல்
ராஜபார்ட் ரங்கதுரை
(ஈஸ்ட்மன் கலர்—புதிய பிரதி)

வின்ஸர் தொலைபேசி 466
(யாழ்ப்பாணம்) தினசரி 5 காட்சிகள்
தினசரி: 10-30, 1-30, 4-30, 7.15, 10-00
சுதாகர்-ராதிகா-விஜயன்-ரதி
மற்றும்பலர் நடித்த
**நிறம் மாறாத பூக்கள்**
(வண்ணப்படம்)

மகத்தான தமிழ் சிங்களப் புத்தாண்டு வெளியீடு!
சாந்தி யாழ் நகர் போன்: 7642.
தினசரி 10-30,2-30, 6-30, 9-45.
ராஜேஷ் கன்னா (இரட்டைவேடம்), சர்மிலாதாகூர்
**"டாஹ்"** ஹிந்தி
ஈஸ்ட்மன் கலர்
இசை: லக்ஷ்மிகாந்த் பியோரலால். காதுக்கினிய பாடல்கள், கண்கவர் நடனங்கள். பரபரப்பூட்டும் பயங்கரச் சண்டைக் காட்சிகள் யாவும் ஒருங்கே அமைந்த வண்ணத் திரையோவியம்.
**"DAAG"** Hindi in Eastman color
RAJESH KANNA (Duel Role), SHARMILA TAGORE
Music: Laxmikant Pyarelal
Full of Music & Action Packed Movie


# 'எழுதுவினைஞர்சம்பளத்தை மீளாய்வுசெய்க!'

(பண்டத்தரிப்பு)

"தற்போதைய வாழ்க்கைச் செலவையும், விலைவாசி உயர்வையும் கருத்திற்கொண்டு எழுதுவினைஞர்களின் சம்பளத்தை மீளாய்வு செய்யுமாறு பிரதமரும், உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சருமான திரு. ஆர். பிரேமதாசாவை நேரில் சந்தித்து சங்கஉபகுழு பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும்."

மேற்கண்ட தீர்மானம், உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தின் வலிகாமம் கிளையின் 4 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

சங்கத் தலைவர் திரு. மா. இராசரத்தினம் தலைமையில் சுன்னாகம் பட்டினசபை மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தாய்ச்சங்கத் தலைவர் திரு. எம். வேலுப்பிள்ளையும் கலந்துகொண்டு உரையாற்றினார். உத்தியோகத்தர்களுக்கு புகையிரத பருவச்சீட்டு வழங்க உள்ளூராட்சி மன்றங்கள் நான்கில் மூன்று பங்கு கட்டணம்கொடுத்து உதவுவதுபோல, பஸ்வண்டி மூலம் பிரயாணம் செய்து காரியாலயங்களுக்கு வரும் உத்தியோகத்தர்களுக்கு பஸ்வண்டி பருவச்சீட்டை உள்ளூராட்சி மன்றங்கள் நான்கில் மூன்றுபங்கு கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொடுக்க தாய்ச்சங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற தீர்மானம் உட்பட வேறு பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் மா. இராசரத்தினம், உபதலைவர் அ. துரைராசா, செயலாளர் அ. பாலசுந்தரம், உபசெயலாளர் கி. செல்வரத்தினம், பொருளாளர் இ. இராமலிங்கம். செயற்குழு உறுப்பினராக 6 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

## புதுவருடத்தின் விளையாட்டுப் போட்டிகள்

[மன்னார்]

பொலிஸ் பொது மக்கள் நல்லுறவை வளர்க்கும் முகமாகபுதுவருடத்தினமான 13ம் திகதி, மன்னார் விளையாட்டரங்கில் விளையாட்டுப் போட்டிகள் இடம் பெறும்.

மன்னார் வர்த்தகர் சங்கமும் தனிப்பட்ட பிரமுகர்களும்இவ் விளையாட்டு விழாவிற்குத் தேவையான உதவிகளைச் செய்ய முன் வந்துள்ளார்கள். விளையாட்டுப் போட்டியில் பரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், நீச்சல் போட்டி போன்ற பல நிகழ்ச்சிகள் இடம்பெறும். விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கானஏற்பாடுகளை மன்னார் பொலிசாரும் பொது மக்களும் துரிதமாக மேற்கொண்டு வருகின்றனர்.

## ஆசிரியர்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பாராட்டைப் பெற்றுள்ளன. இது மாணவர்களின் ஆர்வத்தையும் முன்னேற்றத்தையும் எடுத்துக்காட்டுகிறது.

தலைவர் தமது தலைமையுரையில் இவ்வித்தியாலய அபிவிருத்திக்கு இதுவரை ஒத்துழைப்பு வழங்கியதுபோல் தொடர்ந்தும் வழங்க பெற்றோர்கள் சகலரும் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். (இ)


ஹரன் யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
சிவகுமார்
(இரு வேடம்)
**பட்டிக்காட்டு ராஜா**
(புதிய பிரதி)(கலர்)

வெஸ்லி (யாழ்ப்பாணம்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்.-லதா
**ஊருக்கு உழைப்பவன்**
(புதிய பிரதி)

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
சந்திரபாபு
**கவலை இல்லாத மனிதன்**

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) 11-4-1980 இன்று
முதல் குதூகலமான புத்தாண்டு வெளியீடு.
தென்னிந்தியத் திரைப்பட நடிகர்கள்
● ஜெய்சங்கர் ● அசோகன் ● நாகேஷ் ● ராதிகா ● ஜெயச்சந்திரன்
ஆகியோருடன் ஈழவள நாட்டின் தலைசிறந்த நடிகர்கள்
● தர்மலிங்கம் ● டிங்கிரி கனகரத்தினம் ● V. R ஸ்ரீ நடராஜா
● ஜயதீபன் ● கீதா ● அஜேஜா ஆகியோர் தோன்றும்
பிறைட்டன் பிலிம்ஸ்
**ரத்தத்தின் ரத்தமே**
(வண்ணங்கலர்)
டைரக்ஷன்: ஜோ தேவ ஆனந்த்


# இன்றைய பலன்

பங்குனி மாதம் 29-ந்திகதி (11-4-80) வெள்ளிக்கிழமை

மேடம்: பிரிவின் தாக்குதல் வேதனையைத் தரும். தொழில்துறையிலும் பின்தங்க நேரிடும். சிலர் வாழ்க்கையில் அவப் பெயருக்கும் இடமுண்டு. மனத்திடம் விரும்பத்தக்கது.

இடபம்: வாழ்க்கையில் சில முன்னேற்றமான சம்பவங்கள் இடம் பெறும். வாசனை விருத்திக்கு இடமுண்டு. நீர்ப்பாசனப் பகுதியில் கடமையாற்றுபவர்களுக்கு சிறப்பான தினம். கல்வியிலும் ஆர்வம் பிறக்கும்.

மிதுனம்: வரவேற்கவேண்டிய சம்பவங்கள் இடம் பெறும். புத்திரர்களால் பெருமகிழ்ச்சிக்கு இடமுண்டு. உள்ளத்தில் உவகை துள்ளும். பெரிய இடத்துத் தொடர்புகள் உங்களுக்குப் பெருமையைத் தரும்.

கடகம்: பூமிப் பிணக்குகளால் வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ள நேரிடும். வாகனம் செலுத்துவோர் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். எதிலும் உணர்ச்சி வசப்படாதிருக்கவும்.

சிங்கம்: காதலர்களுக்கு கற்கண்டான தினம். குடும்பத்தர்களின் வாழ்வில் குதூகலம் தென்படும். உறவினர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். பெற்றோர்களின் ஆசியும் தப்பாமல் கிட்டும்.

கன்னி: தென்றலும் தீயாக மாறும். குடும்பத்தில் அபிப்பிராய பேதங்கள் தோன்றக்கூடும். சிலர் வாத ரோகத்தினாலும் பாதிக்கப்படுவார்கள் உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும்.

துலாம்: உங்கள் நடவடிக்கைகளில் தனிச் சிறப்பு தென்படும் சிலர் வாழ்க்கையில் பொறுப்பான தலைமைக்குப் இடமுண்டு. பெரியவர் ஒருவர் உங்களுக்குக் கைகொடுத்துதவுவர்.

விருச்சிகம்: வாழ்வுப் பாதையில் வளமான திருப்பம் தென்படும். தொழில் துறையில் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். சிலர் வாழ்க்கையில் அரசினர் விருந்துக்கும் இடம் ஏற்படும்.

தனுசு: பொருளீட்டுவதில் புதிய வழிகளைக் கையாளுவீர்கள். எதையும் சிறப்பாகச் சாதிப்பதில் முதலிடத்தைப் பெறுவீர்கள். மக்களாலும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு. சிலருக்கு உத்தியோக உயர்வும் இடைக்கும்.

மகரம்: பணத்தை அள்ளி வீசினாலும் பலன் மட்டமாகத்தான் இருக்கும். சகதொழிலாளருடன் மோதல்களைத் தவிர்த்துக் கொள்ளவும். புனைந்துரைகளால் மனம் புண்படலாம். பொறுமை வேண்டும்.

கும்பம்: இன்னலின் பின்னலால் வேதனைப்படுவீர்கள். நீண்டகாலத் தொடர்பு ஒன்று இன்று துண்டிக்கப்படலாம். அவசர முடிவுக்கு வராது நன்றாகச் சிந்தித்த பின்பு செயலாற்றவும். சுமாரான தினம்.

மீனம்: முன்னாள் ஆசிரியர் ஒருவர் உமது முன்னேற்றத்துக்கு வழிகாட்டுவார். அடக்கமான நடவடிக்கைகளின் மூலம் மற்றவர்களின் மனதை கவருவீர்கள். இறை நம்பிக்கை மேலோங்கும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## சமாதான நீதவான்



வண்ணார்பண்ணை வடமேற்கு தபையா அருள்பிரகாசன் தம்பித்துரை யாழ்ப்பாண நீதி நிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதவானாக யாழ்ப்பாணம் உயர் நீதிமன்றத்தில் அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

பொதுநல சேவையும் சமூகப்பணியில் மிகுந்த ஈடுபாடுமுடைய இவர் மானிப்பாய் வெஸ்லி சினிமா பங்காளரும், யாழ். பஸ் நிலைய ஞானவைரவர் ஆலய பரிபாலன சபைத் தலைவராகவும் யாழ் டாக்ஸி சேவையாளர் சங்கத்தலைவராகவும் சேவையாற்றி வருகிறார். இவர் யாழ் மாநகர ஓடுமடம் ப. நோ. கூ. சங்கக் கிளை 4, வண்-வடமேற்கு கிளை 4A தலைவராகவும் உயரப்புலம் மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை பொருளாளராகவும் 14வருடங்கள் சேவையாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷார்ப் போட்டோ
கொப்பியிங் சேர்விஸ்
(COPYING SERVICE)

சகல விதமான, அச்சு மற்றும் கையெழுத்துப் பத்திரங்களை குறைந்த செலவில், குறுகிய நேரத்தில் இறக்குமதிசெய்யப்பட்ட காகிதத்தில் போட்டோ பிரதி செய்து கொடுக்கப்படும்.

SHARP PHOTO
10, கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.
(சுன்னாகம் மக்கள் வங்கி முன்பாக)

ஈழநாடு
The EELANAADU
50 சதம்

## கஞ்சா கடத்தல் முறியடிப்பு

லண்டன், ஏப். 10
ஈரானிலிருந்து லண்டன் வந்த ஈரானியர் ஒருவரிடமிருந்து 5 கோடி ரூபா பெறுமதியான கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

விமானம் மூலம் வந்த அந்த ஈரானியரின் பெட்டியில் ஒரு பகுதியில் இந்தக் கஞ்சா மறைத்து வைக்கப்பட்டிருந்ததை சுங்கப்பகுதியினர் கண்டுபிடித்தனர்.

Dilka Watch Works
SPECIALIST IN WATCHREPARING
யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ள...


டில்கா வாச் வேக்ஸ்
- பஸ் நிலைய எதிர் மேல்மாடி -
404/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

பாண்டியன்தாழ்வு கொலைவழக்கு

# "அண்ணன் திரும்பியதும் 1ம் எதிரி நெஞ்சில் குத்தினர்"

## சகோதரன் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"நானும், அண்ணனும் சென்றுகொண்டிருந்தோம். பின்னால் இருவர் ஓடிவரும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தோம். 1ம் எதிரி யோகன். அண்ணனின் நெஞ்சில் கத்தியால் குத்தினர். 1ம் எதிரி கையில் பொல்லு வைத்திருந்தார். அவர் ஒன்றும் செய்யவில்லை. குத்திய பின் இருவரும் ஓடிவிட்டனர்"

பாண்டியன்தாழ்வு கொலை வழக்கில் சாட்சியமளித்த இறந்தவரின் சகோதரர் வேதநாயகம் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு நேற்றுக் காலை யாழ் மேலதிக நீதிமன்றத்தில் மேலதிக நீதவான் திரு. எஸ். நாகராசா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் பாண்டியன்தாழ்வில் யேசுதாசனை கொலை செய்ததாக எஸ். யோகராசா என். ஆனந்தன் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகள் ஆர். ஈ. தம்பிரத்தினம், சி. கனகசபாபதி, எஸ். யோகநாதன் ஆகியோர் ஆஜராஞர்கள். உதவிப் பொலிஸ் அதிபர் ஜனுப் எம். நிசாம் வழக்கை நடத்தினர்.

### 4 பேர் அடித்தார்கள்

வேதநாயகம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது;

சம்பவம் நடந்த தினத்திற்கு முதல் நாள் பாண்டியன்தாழ்வு பேக்கரி மேல்மாடிகளை 'நேற்று இன்று நாளை' படம் ரிவியில் காட்டப்பட்டது. சகோதரர்களுடன் படத்திற்குப் போனேன். இப்படக் காட்சியின்போது இறந்த என் அண்ணனை அடித்தார்கள். 4 பேர் அண்ணனை அடித்தார்கள். அவர்களில் ஒருவர்தான் முதலாம் எதிரியான யோகராசா. அவர் இங்கு நீதிமன்றத்தில் இருக்கிறர். அச்சண்டையில் அண்ணனுக்குக் காயமேற்பட்டது இந்தச் சம்பவத்தைப்பொட்டிப் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டது. இறந்த பின் அண்ணன் குருநகர்ப் பொலிசில் முறைப்பாடுசெய்தார். நான் போகவில்லை.

அந்த முறைப்பாட்டை பொட்டி மறுநாள் பொலிசாரால் விசாரணை செய்யப்படவில்லை.

அடுத்த நாள் மற்றச் சம்பவம் நடந்தது. அதுவும் பாண்டியன்தாழ்வில் நடந்தது. நீலகண்டன் கடைக்கு முன்னுல் இச்சம்பவம் நடைபெற்றது. ரிவி படக்காட்சி நடந்த பேக்கரியிலிருந்து 15 யார் தூரத்தில் நீலகண்டன் கடை உள்ளது.

நான் அண்ணனுடன் வந்து கொண்டிருந்தேன். கோவிலடியில்தான் மேசன்வேலை முடிந்து யாழ்ப்பாணத்திலிருந்து வந்த அண்ணன் சந்தித்தார். மின்சார விளக்கு முன்னுல் எரிந்துகொண்டிருந்தது அண்ணன் மஞ்சள் சேட்டும் கறுப்புக் காற்சட்டையும், சிலிப்பரும் அணிந்திருந்தார்.

### நெஞ்சில் குத்தினர்

நாங்கள் வீட்டுப் பக்கம் நடந்துபோனேம். நீலகண்டன் கடைக்கு முன்னுல் போகும்போது இருவர் ஓடிவரும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தோம். அண்ணனுக்குக் குத்து விழுந்தது. 1ம் எதிரி அண்ணனை நெஞ்சில் குத்தினர். கத்தியின் நீளம் ஒரு முழமிருக்கும். 2ம் எதிரி பொல்லு வைத்திருந்தார். அவர் ஒன்றும் செய்யவில்லை. பின் இருவரும் ஓடிவிட்டார்கள். அண்ணன் குளறினர். சத்தம் கேட்டுச் செல்லத்துரை வந்தார். சம்பவம் இரவு 7-30 மணிக்கும் 8-00 மணிக்குமிடையில் நடந்தது. கடை வெளிச்சம் இருந்தது. எதிரிகளை அந்த வெளிச்சத்தில் அடையாளம் கண்டேன். கார் பிடித்து யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதித்து அங்கு மரணமானர். நீலகண்டனை அந்த நேரம் காணவில்லை. பொலிசுக்கு இரவு வாக்குமூலமளித்தேன்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. (கு)

## நீதிமன்றம் கலையும்வரை மறியல்

(யாழ்ப்பாணம்)

பாண்டியன்தாழ்வு கொலை வழக்கு விசாரணை யாழ் மேலதிக நீதிமன்றத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம், சம்பந்தமில்லாமல் சாட்சிமகாலுக்குச் சென்றவர் நீதிமன்றம் கலையும்வரை மறியலில் வைக்கப்பட்டார்.

விசாரணையை பார்த்துக் கொண்டிருந்த ஒருவர் சாட்சிகள் தங்கியிருக்கும் சாட்சிமகாலுக்கு சென்றுரென சட்டத்தரணி எஸ். யோகநாதன் மேலதிக நீதவான் திரு. நாகராசாவின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

சாட்சிமகாலில் காணப்பட்டவரான அச்சுவேலியைச் சேர்ந்த ராஜன் என்பவர் நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

விசாரணையை பார்த்ததாகவும் பின் கடைக்கு சென்று தேநீர் அருந்திவிட்டு சாட்சி மகாலுக்குள் இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

எதற்காக சாட்சிமகாலுக்குள் போனீர்? என நீதவான் கேட்டபோது அது சாட்சி மகால் என்று தனக்குத் தெரியாதென்றும் கிட்டினன் என்பவரை சந்திக்கவந்ததாகவும், அவரை சந்திக்கவில்லையென்றும் கூறினர்.

நீதவான் அவரை கோட்சாஜன் எஸ். ஜே. அன்ரனிடம் இதுபற்றி விசாரணை செய்யக் கட்டளையிட்டார். மீண்டும் ஆஜர்செய்யப்பட்டபோது நீதிமன்றம் கலையும் வரை மறியல் வைக்க உத்தரவிட்டார். (கு)

மக்கினென் டிரவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்டெட்
உங்களை
திருச்சிராப்பள்ளி, மதுரை, பம்பாய், கோலாலம்பூர், சிங்கப்பூர், பரிஸ், லண்டன், துபாய், சவூதி அரேபியா, கனடா ஆகிய நாடுகளுக்கு அழைத்துச் செல்ல
மற்றும்
பாஸ்போட், அமெரிக்கன் டிறவலர்ஸ் செக், உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட், சுற்றுலாக்கள் ஆகிய உங்கள் தேவைகளை
கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்துகொள்ள
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்.,
தபால் பெட்டி இல: 92
8, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154
பயணம் உங்களது! - சௌகரியமாக்குவது எங்களது!!

பெருங்குளம் கொலைவழக்கு:

## சந்தேகநபர்களுக்கு தலா ரூ. 2500 பிணை

[யாழ்ப்பாணம்]

பெருங்குளம் கொலைசம்பவம் தொடர்பான சந்தேக நபர்கள் இருவரும் தலா 2500 ஆதனப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

யாழ் மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜனுப் எம். ஜாமில் முன்னிலையில் இப்பிணை விண்ணப்பம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பெருங்குளத்தில் 80 ஜனவரி 4-ம் திகதி நாகத்தன் கொலை செய்யப்பட்டதாக சந்தேக நபர்களான இ. பாலசுப்பிரமணியம் வே. இளையதம்பி ஆகியோர் ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களை பிணையில் செல்ல அனுமதிக்குமாறு கோரி சட்டத்தரணி செ. அம்பிகைபாலன் பிணை விண்ணப்பம் தாக்கல் செய்தார். அரசதரப்பில் சட்டத்தரணி ஆர். தலைராசா ஆஜரானர்.

நீதிபதி சந்தேக நபர்களை தலா 2500 ரூபா பிணையில் செல்லஅனுமதித்து ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு சென்று பதிவுசெய்ய வேண்டும் என கட்டளையிட்டார். [கு]

## இரவு ரயில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டிகள், கடுகதிப் புகையிரதத்திற்குப் பின்னர் புறப்படுவதால் மிகத் தாமதமாக வே வந்து சேர்வதுடன், தபால் சேவையும் தாமதமடைகின்றது.

"கடுகதிப் புகையிரதம் அதிகாலையிலேயே கொழும்பையும், யாழ்ப்பாணத்தையும் சென்றடைவதால், பிரயாணிகள் தாங்கள் செல்கின்ற இடங்களுக்கு செல்வதற்குப் போக்குவரத்து வசதி இல்லாமல் புகையிரத நிலையத்திலேயே பல மணி நேரங்கள் தத்தளிக்க வேண்டியுள்ளது. இவற்றைக் கருத்தில் கொண்டு கடுகதிப் புகையிரதத்தை; தபால் புகையிரத வண்டியின் பின்னர் சேவையில் ஈடு-டுத்துவது மிகவும் பொருத்தமாயிருக்கும்" என்று குறிப்பிட்டுள்ளார். [கு]

## யாழ், மாநகர...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வீதி, கே. கே. எஸ். வீதி, கண்டி வீதி, பலாலி வீதியிலிருந்து ஆரம்பமாகும் ஊர்வலங்களுக்கு பொலிசாரிடம் அனுமதிகோருதல்" [கொ-கு]

## கொலை வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

[மாவிட்டபுரம்]

ஏழாலை கொலை வழக்கு விசாரணை இம் மாதம் 28 ம் திகதிக்கு ஒத்தி வைக்கப் பட்டது.

ஏழாலையைச் சேர்ந்த கந்தையா தில்லையம்பலம் என்பவரை கத்தியால் வெட்டிக் கொலை செய்ததாக மல்லாகத்தைச் சேர்ந்த எம். மாலிங்கம் என்பவர் மீது தொடரப்பட்டிருந்த வழக்கு மல்லாகம் நீதி மன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப் பட்டது.

அச் சமயம் இம்மாதம் 28 ம் திகதிக்கு விசாரணையை ஒத்தி வைத்த நீதிவதி திரு. சி. ஆர். இராஜசிங்கம் எதிரியை தொடர்ந்துப் றிமாண்டில்வைக்குமாறு உத்தரவிட்டார். (இ)

### தேவை

தனியார் வைத்தியசாலை ஒன்றில் மருந்துக் கலவையாளராகப் பணிபுரிய பெண் ஒருவர் தேவை. க.பொ.த. (சாதாரண) சித்தியுடன், ஆங்கில அறிவும் உடையவராகவும், இணுவில், கோண்டாவில், தாவடி பகுதிக்குள் வசிப்பவராகவும் இருக்கவேண்டும். விண்ணப்பிக்கவும்: விளம்பர இல: 5434, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 5434

### விற்பனைக்கு

2 X CD 185 Honda Bicycles, 1 X 400 CC Honda Bicycle விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்புகொள்ளவும். பொ. சிவசுப்பிரமணியம், நகை அடைவு பிடிப்பவர், சிங்கர் பில்டிங், கண்டி வீதி, கிளிநொச்சி. 5464

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் க்காக ..... அவர்களால் யாழ்ப்பாணம் சிவன்கோவில்மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் ஏப்ரல் மாதம் 11-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the General Post office SriLanka under No. GE/8243/78 The Eelanaadu, Post Box No. 49, Telegram: 'Eelanaadu' Phone: 889.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org